**விளம்பரங்கள்**
அனைத்துவகையான
விளம்பரங்களையும்
பிரசுரிக்க
நாடுங்கள்...
தினப்புயல்
154, 6ம் ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

நடுநிலை இதழ்

# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06

**அன்பான வாசக நெஞ்சங்களே**
எமது
தினப்புயல் பத்திரிகை
தொடர்பான அனைத்து
விமர்சனங்களையும்,
ஆக்கங்களையும்
வரவேற்கின்றோம்.

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885 Email:tthinappuyalnews@yahoo.com இதழ் - 62



## பென்டகன் தாக்கப்பட்டதையடுத்தே பிரபாகரனை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா தீவிரம் காட்டியது


## அரசதரப்புடன் த.தே.கூட்டமைப்பு பேச்சு நடத்தி வெற்றி காணுமா?

## இறுதியுத்தத்தில் காணாமல் போனோர் தொடர்பில் அரசாங்கம் விபரம் திரட்டுகிறது

Kugan Motor Stores
IMPORTERS AND DEALERS IN TRACTOR& MOTOR SPARE PARTS.
ATS ENGLAND | Mahindra | MASSEY FERGUSON | Perkins® | TAFE | Ashok Leyland
No: 52, 2nd Cross Street,
Vavuniya.
Tel: 024 2221845
Fax: 024 2221842
Mobile: 077735967

# பென்டகன் தாக்கப்பட்டதையடுத்தே பிரபாகரனை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா தீவிரம்காட்டியது





உலகை தன் கட்டுக்கோப்பிற்குள் கொண்டுவர நினைக்கும் அமெரிக்காவினை உருக்குலைய வைத்த நிகழ்வு பென்டகன் மீதான தாக்குதலாகும். கடந்த 2001ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ஆம் திகதி அமெரிக்க வரலாற்றில் பாரிய இழப்பை சந்தித்த நாள். அவ்வாண்டின் அத்தினத்தில் அமெரிக்காவில் அமைந்துள்ள உலக வர்த்தக மையமான பென்டகன் மீது அல்கைதா பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். குறித்த சம்பவம் இடம்பெற்று 13வருடங்கள் பூர்த்தியாகியுள்ளது.

வல்லரசு நாடான அமெரிக்காவுக்கு எதிராக பயங்கரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட பாரிய தாக்குதலாக பென்டகன் தாக்குதல் வரலாற்றில் பதியப்பப்பட்டுள்ளது. நியுயோர்க் நகரில் கம்பீரமாக காட்சியளித்த உலக வர்த்தக மையத்தின் வடக்கு மற்றும் தென்பகுதி கட்டிடங்கள் 110 மாடிகளை உள்ளடக்கிய பாரிய கட்டிடமாகும். குறித்த கட்டிடம்மீது 1993ஆம் ஆண்டில் முதலாவது தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் 6 பேர் கொல்லப்பட்டதோடு கட்டிடம் சிறியளவிலான சேதங்களுக்குள்ளாகியது.

இந்நிலையில் 2ஆம் தடவையாக குறித்த கட்டிடம்மீது கடந்த 2001ஆம் ஆண்டு 11ஆம் திகதி 2ஆவது தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் 2,973 பேர் கொல்லப்பட்டதோடு 6,291 பேர் காயங்களுக்குள்ளாகினர். வல்லரசு நாடான அமெரிக்கா பயங்கரவாதத்திற்கெதிராக மேற்கொண்ட அழுத்தத்தினூடாக சந்தித்த பாரிய அழிவு இதுவென அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்நிலையில் தீவிரவாதத்தை உலகிலிருந்து வேரோடு அழிக்கும் முயற்சியில் அமெரிக்கா தீவிரம்காட்டியது. இதன் பயனாக பாகிஸ்தானில் வைத்து அல்கைதா தலைவர் உட்பட அவரது குழுவினர் அமெரிக்காவின் விசேட உளவுப்பிரிவினரான சீல் பிரிவினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதன்மூலம் அமெரிக்காவின் நீண்டகால ஆசையும், முக்கிய நோக்கமும் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை இலங்கையில் இருந்து செயற்பட்டு வந்த விடுதலைப்புலிகள் அமைப்பையும் அதன் தலைவர் வே. பிரபாகரனையும் அழிப்பதில் அமெரிக்கா முனைப்பு காட்டலாயிற்று. 1997லேயே அமெரிக்கா விடுதலைப் புலிகளை அந்நிய ‘பயங்கரவாத அமைப்பு’ என்று பிரகடனம் செய்தது. 2001இல் ‘தனிச்சிறப்பானஉலகபயங்கரவாதி’ என்று முத்திரைகுத்திதனது ‘பயங்கரவாதத்திற்கு எதிரான உலகப் போர்’ கொள்கைக்கு ஏற்ப விடுதலைப்புலிகளை சித்தரித்தது. 2006இல் அமெரிக்காவின் நிர்ப்பந்தத்திற்கு பணிந்து ஐரோப்பிய ஒன்றியமும் புலிகளை பயங்கரவாத அமைப்பில் பட்டியலிட்டது. அதே வருடம் புலம்பெயர் தமிழர்களிடமிருந்து புலிகளுக்கு வந்து கொண்டிருந்த நிதியை நிறுத்த இலங்கை நடவடிக்கைகளை மேற்கொண்டது. கனடா மற்றும் ஐரோப்பாவிலிருந்து ஏவுகணைகள் கொள்முதல் செய்த புலிகளின் முகவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இதனால் ஒரு குறைந்த இடைவெளி நேரத்தில் புலிகள் தமது இருப்புக்கு ஆதாரமான தேசங்கடந்த நிதி மூலத்தை இழந்தார்கள்.

அமெரிக்கா மட்டுமன்றி அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடான இஸ்ரேல் இலங்கைக்கு போர் விமானங்களையும், ரோந்து விமானங்களையும் அளித்தது. இந்தியா ரோந்து கப்பல்களையும், ரேடார் கருவிகளையும் வழங்கியது. முக்கியமாக, இந்தியாவின் தென்மண்டல கடற்படை, புலிகளின் ஆயுதவரத்தை முறியடிக்க இலங்கை கடற்படைக்கு பேருதவி அளித்தது. மேலும் புலிகளின் கடல் போக்குவரத்தை முற்றிலும் முடக்கியது. பாகிஸ்தான் போர்க்கருவிகளையும் போர்க்கருவிகளையும், கையெறி குண்டுகளையும் இலங்கைக்கு வாரி வழங்கியது.சீனாவாகனங்கள்,சிறியவகை ஆயுதங்கள், எளிமையாக கையாளும் போர்க்கருவிகள், பீரங்கிகள் மற்றும் படைத்தளபாடங்கள் முதலியவற்றை பெருமளவுக்கு வழங்கியது. இது போக போர் விமானங்களும், ரேடார் கருவிகளையும் வழங்கியது. ஜப்பானை இடம் பெயர்த்து சீனா இலங்கைக்கு பொருளாதார உதவி செய்வதில் முன்னணி நாடாக ஆனது என்பதும் கவனத்துக்குரியது. அமெரிக்கா உள்ளிட்ட அயல்நாடுகளின் இராணுவ பயிற்சியும் இலங்கை இராணுவத்தின் திறனை அதிகரித்தது.


மேலும் 2007இல் அமெரிக்கா வழங்கிய அதிநவீன ரேடார் கருவிகள் தான் புலிகளின் கடற்படையை நிர்மூலமாக்க இலங்கைக்கு பயன்பட்டது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இலங்கைக்கு உதவியாக அமெரிக்கா அதி நவீன வெடிபொருட்கள், குண்டுவெடிப்பு தடுப்பு சாதனங்கள், கடத்தப்பட்டவர்களை மீட்க உதவும் சில பொருட்கள் போன்றவற்றை வழங்கியது. இவை ஒருபுறமிருக்க 2006ஆம் ஆண்டில் அப்போதைய இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொன்டலீசா ரைசிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்து அமெரிக்காவில் விடுதலைப் புலிகளின் எல்லாச் செயற்பாடுகளையும் தடுப்பதற்கு, ஒரு செயலணிக்குழு அமைக்கப்பட்டது. இதன்படி, கனேடிய எல்லை வழியாக அமெரிக்காவில் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை கொள்வனவு செய்ய வந்த விடுதலைப் புலிகள் கைது செய்யப்பட்டனர். 2007 ஜனவரியில் இவர்கள் கைது செய்யப்பட்டவுடன், புலிகளின் ஆயுத வலையமைப்பின் செயற்பாடுகளைத் தடுக்க முடிந்தது.


இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளை ஏற்று, அமெரிக்க அரசாங்கம் ஹவாயில் உள்ள பசுபிக் கட்டளைப்பீடத்தின் கீழ் உள்ள, 7வது கடற்படை அணியின் போர்க்கப்பலான “யுஎஸ்எஸ் புளு றிட்ஜ்” இல் இருந்து, விடுதலைப் புலிகளின் கப்பல்களின் நடமாட்டம் பற்றிய, குறிப்பாக ஆயுதக் கப்பல்களின் நகர்வுகள் பற்றிய செய்மதிப் படங்கள் இலங்கை அரசுக்குத் தொடர்ச்சியாக வழங்கப்பட்டன. கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் ஊடாக, இந்தச் செய்மதிப் படங்கள் இலங்கை இராணுவத்திடம் கொடுக்கப்பட்டன. இந்த செய்மதிப் படங்களை கிரகித்துக் கொள்ளும் ஆற்றல் மிக்க அதிகாரிகள் எவரையும் இலங்கை இராணுவம் அப்போது கொண்டிருக்கவில்லை. இதையடுத்து கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம், மேஜர் கெலும் மத்துமகே என்ற இலங்கை இராணுவ அதிகாரிக்கு புலமைப்பரிசில் வழங்கி, கொலராடோவில் உள்ள இராணுவ அக்கடமியில் இது பற்றிய பயற்சிநெறியை மேற்கொள்ள உதவியது.

அதன்பின்னர், இலங்கை கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட பேர்ல் துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளைத் தடுப்பதற்கான சிறப்பு பயிற்சிகளை கரையில் இருந்த 700 கடல்மைல் தொலைவில் வைத்து பெற்றுக்கொண்டார். இந்த சிறப்புப் பயிற்சியை அடுத்து அமெரிக்காவின் 7வது கடற்படை அணியின் ‘யுஎஸ்எஸ் புளு றிட்ஜ் தொழில்நுட்ப உதவிகளை வழங்கியதுடன், இலங்கை இராணுவத்தினால் பெறப்பட்ட செய்மதிப் படங்களின் அடிப்படையில் ஆழ்கடலில் விடுதலைப்புலிகளின் கப்பல்களை அழிக்க இலங்கை கடற்படை மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்து வந்தது.

அமெரிக்க இராணுவத்திடம் இருந்து பெறப்பட்ட உதவியின் மூலம் உயர்திறன் கொண்ட ஆயுதங்கள் மற்றும் கருவிகளை ஏற்றி வந்த விடுதலைப் புலிகளின் எல்லாக் கப்பல்களையும் இலங்கை கடற்படை ஆழ்கடலில் தாக்கியழித்தது. தாக்கியழிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் 8 கப்பல்களில் இருந்த ஆயுதங்கள் வடக்கைச் சென்றடைந்திருந்தால், போரின் இறுதி முடிவு வேறுமாதிரியாக அமைந்திருக்கும் என்பது உண்மையே. விடுதலைப்புலிகளின் எட்டு ஆயுதக்கப்பல்கள் இலங்கை அரசுடனான யுத்தத்துக்கு ஆயுதங்களுடன் அனுப்பிவைக்கப்பட்டதை அமெரிக்கா உறுதி செய்து கொண்டது. இந்த எட்டு ஆயுதக் கப்பலில் ஏதாவது ஒன்று விடுதலைப்புலிகளது வசம் சென்றிருந்தால் தமிழீழம் கிடைக்குமளவுக்கு அவர்களது தாக்குதல் அமையப்பெற்றிருக்கும்.

லிபியா, சிரியா, ஈராக், உள்ளிட்ட நாட்டுத் தலைவர்களை இலக்குவைத்த அமெரிக்கா பிரபாகரனை வேறுவிதமாக அழித்தொழிக்க திட்டம் தீட்டியது. நேரடியாக அமெரிக்கா தலையிடாததன் காரணம் இந்திய நாட்டிற்கு தான் எதிரியாகிவிடக்கூடாது என்பதற்குத்தான். மட்டுமன்றி உலக வல்லரசு நாடுகளில் அமெரிக்காவை எதிர்க்கக்கூடிய திறன் இந்தியாவுக்கே இருக்கிறது. இதன் காரணமாக இந்தியாவுடன் இணைந்துகொண்டு ஏனைய நாடுகள் போரைத் தம்வசம் திருப்பிவிடும் என்ற காரணத்தால்தான் இந்தியாவை மீறி அமெரிக்கா செயற்படாத நிலை ஏற்பட்டது. இறுதியில் பிரபாகரனையும், ஒசாமா பின்லேடனையும் ஒரே பார்வையில்தான் பார்த்தது அமெரிக்கா. இதன் விளைவே இன்று பிரபாகரனின் மக்கள் விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் இன்று முடக்கப்பட்டுள்ளது.





இலங்கை இராணுவத்தால் விடுதலைப்புலிகளை வெற்றி கொள்ள முடியாது என்ற இறுதித்தீர்வின் பின்பே இலங்கையரசு அமெரிக்கா, இந்தியா, சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் உதவிகளை நேரடியாக் கேட்டுப் பெற்றுக்கொண்டு போரைத் தீவிரப்படுத்தியது. ஆனால் மீண்டும் இலங்கைத்தீவில் ஆயுதக்கலாச்சாரத்தை உருவாக்க இந்த நான்கு நாடுகளும் முனைந்து வருவதை இலங்கையரசு அறிந்தும் அறியாதது போல இருப்பது கவலைக்குரியதாகும்.

இதைவிட அமெரிக்காவின் உலக ஆக்கிரமிப்பு என்பது யாவருக்கும் தெரிந்த ஒன்று. இதனால்தான் அமெரிக்கா இலங்கைப் பிரச்சினையில் உருப்படியான மாற்றத்தைக் கொண்டு வர விரும்பாமல் போர் முடிந்த பின்னரேயே மெதுவாகத் தனது அதிருப்தியை தெரிவித்துள்ளது. யூகோஸ்லேவியா, ஆப்கானிஸ்தான், ஈராக், ஏமன், லிபியா மத்திய ஆபிரிக்க குடியரசு மற்றும் மியன்மார் தற்போது சிரியா என பல நாடுகளிலும் தனது ஆக்கிரமிப்பை நடத்த தேவையில்லாமல் பல குறுக்கீடுகளைச் செய்தது. இது அமெரிக்காவின் வாடிக்கையான பழக்கமும் கூட. குறுக்கீடுகளைச் செய்யும். தன்னுடைய படைகளை அனுப்ப விரும்பாத இடங்களுக்கு ஆயுதங்களையும், பயிற்சியையும் எதிர்ப்பு படைகளுக்கு வழங்கி வந்திருக்கிறது.

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## சர்வதேச அழுத்தங்களுக்குள் இலங்கையரசு

இலங்கை அரசாங்கமானது வரலாற்றில் இதுவரை சந்தித்திராத அழுத்தங்களை இப்போது சந்தித்து வருகிறது. இறுதிப்போர் தொடர்பான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள், அவை தொடர்பான நீதியான விசாரணையில் இலங்கையரசு காட்டி வரும் தயக்கம் என்பன சர்வதேச ரீதியிலான அழுத்தத்தை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

நவநீதம்பிள்ளையின் இலங்கை வருகை, நடைபெற்று முடிந்த பொதுநலவாயமாநாடு, அதில் பிரிட்டன், கனடா போன்ற நாடுகள் முன்வைத்த நேரடியான குற்றச்சாட்டுக்கள், சனல் 4வின் ஆவணப்படம், மார்ச்சில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் கூட்டத்தொடர், பூகோளமயப்படுத்தப்பட்டிருக்கும் விடுதலைப்புலிகளின் போராட்டம், உள்நாட்டு கட்சி முரண்பாடுகள் போன்ற அனைத்து விடயங்களும் இலங்கைக்கு பாதகமாகவே அமைந்துள்ளன.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் கூட்டத்தை நடாத்துவதனூடாக, சர்வதேச ரீதியாக தன் மேல் படிந்துள்ள கறையை கழுவலாம் என்று எதிர்பார்த்த இலங்கைக்கு சர்வதேச ரீதியிலான அழுத்தங்களும், விடுதலைப்புலிகளது போராட்டம் சர்வதேச அளவில் எடுத்துக்கொள்ளப்பட்டமையும், தமிழர்களுக்கான சந்தர்ப்பங்களையும் உருவாக்கியமைதான் மிச்சம். இதன் பலாபலனை எதிர்வரும் மார்ச் மாதத்தில் இலங்கை அனுபவிக்கத் தயாராகவேண்டியதுதான்.

ஏனெனில் 2012ஆம் ஆண்டு மார்ச் மாத அமர்வில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்து நிறைவேற்றிய தீர்மானம் அதையடுத்து 2013 மார்ச் மாதம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அவற்றுக்கு அமைவாக இலங்கை அரசாங்கம் நடந்து கொண்டுள்ளதா? என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொறுப்பு ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆனால் அவர் ஒகஸ்ட் மாத இறுதியில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்ந்து விட்டு எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றே குறிப்பிட்டிருந்தார். அதேவேளை எதிர்வரும் மார்ச் மாதத்திற்கு முன்னர் மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை முன்னேற்றத்தை வெளிப்படுத்த தவறினால் இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்படும் என்று பிரித்தானியா தெரிவித்துள்ளது. அத்துடன் இம்முறை மாநாட்டில் வாக்களிக்கும் உரிமையை பிரித்தானியா கொண்டிருப்பது இலங்கைக்கு எதிரான அடுத்த நகர்வில் பிரித்தானியாவின் பங்கை வலுப்படுத்துகிறது.

மறுபுறம் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் வெளியிடும் நோக்கில் இலங்கைக்கு எதிரான தனது புதிய ஆவணப்படத்தை உருவாக்கும் பணிகளை சனல் 4 தொலைக்காட்சி ஆரம்பித்துள்ளது. இதனுடைய நோக்கம் தமிழ்பேசும் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரங்களை கோடிட்டுக் காட்டுவதா? அல்லது இறுதிக் கட்டத்தில் நடைபெற்ற பல கொடூரமான காட்சிகளை திரையிட்டு தனது தொலைக்காட்சியினைப் பிரபல்யப்படுத்தும் நோக்கமா? என்பது தெரியாது.

இந்தநிலையில் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடக்கவுள்ள அமர்வில் இலங்கை அரசாங்கம் கடுமையான அழுத்தங்களை எதிர்கொள்ள நேரிடும் என்பது இப்போதே நன்கு தெரிந்துள்ளது. ஆனால் டேவிட் கமரூனின் எச்சரிக்கையையோ, காலக்கெடுவையோ ஏற்க முடியாது என்று இலங்கை ஜனாதிபதியும், அமைச்சர்களும் நிராகரித்தே வருகின்றனர்.

இவற்றை ஐ.நா செவிமடுத்துக் கொண்டிருக்கப் போவதில்லை. அமெரிக்காவோ, பிரித்தானியாவோ கொண்டுவரக்கூடிய அடுத்த தீர்மானத்தை தோற்கடிக்கும் அளவுக்கு இலங்கையால் செயற்படவும் முடியாது. காரணம் அமெரிக்காவின் கைப்பொம்மையாக இலங்கையரசு மாறியிருக்கிறது. இருந்தபோதிலும் உள்நாட்டு விசாரணைகளில் நம்பிக்கை இல்லை என்றும் சர்வதேச விசாரணைகளே ஒரே வழி என்றும் இதுவரை கூறிவந்த நவநீதம்பிள்ளையின் நிலைப்பாட்டையே பிரித்தானியாவும் எடுத்திருக்கின்றமை இக்கருத்தை இன்னும் பலமடையச் செய்திருக்கிறதே தவிர வேறு எந்த மாற்றங்களையும் கொண்டுவருவதற்கான திட்டங்களும் இல்லை. ஆனால் இலங்கைமீது சர்வதேசம் காட்டும் அழுத்தம் ஓரளவு காணப்பட்டுக்கொண்டே இருக்கிறது. இதனைத் தமிழ் மக்களும், வெளிநாட்டு தமிழர்களும் நம்பிக்கையாக கருதி காத்திருக்கின்றனர்.


மணிகட்டியமாடு என்று கருதப்படும் அமெரிக்கா தமிழ்மக்களுக்கான ஒரு தீர்வினைப் பெற்றுக்கொடுக்குமாயின் அதுவே உண்மையான தீர்வாக அமையும்.

# முற்றுப்புள்ளியிடப்பட்ட ஆயுதப்போராட்டம்

## திம்பு முதல் டோக்கியோ வரை

### 62

மேலும் புலி உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட சம்பவங்களும் புலிகளுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியிருந்தது. அத்துடன் புலிகளின் தலைமை எதிர்பார்த்ததுபோல அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகளின் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களின் பட்டியலில் இருந்து புலிகளின் பெயர் நீக்கப்படவுமில்லை. இவ்வாறான சூழலில் அன்ரன் பாலசிங்கம் தனது உடல் நிலமைகளைக் காரணம்காட்டி நீண்டதூரப் பயணங்கள் மேற்கொள்ள முடியாமல் இருப்பதைத் தெரிவித்து அடுத்த சுற்றுப் பேச்சுக்களை தள்ளி வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் தனியொரு நபரின் உடல்நிலை காரணமாக முக்கியமான சமாதான முயற்சி தாமதம் அடைய முடியாது என்பது சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து பேச்சுவார்த்தைக்கான இடம் மாற்றப்பட்டது. நாகொன்பதாம் நகரிலிருந்துபெர்லினுக்குபேச்சுவார்த்தை மேசை நகர்ந்தது. பெர்லினில் இருந்து நோர்வே தூதுவரகத்தில் பேச்சுவார்த்தை மேசை தயாரானது.



இதேவேளை 1998இன் இறுதியில் கடுமையான சுகவீனத்துடன் ஆபத்து நிறைந்த கடற்பயணம் மேற்கொண்டு அன்ரன் பாலசிங்கம் இலங்கையிலிருந்து வெளியேறி இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்பதாக மின்னேரியா இராணுவ முகாமில் இராணுவ உயர் அதிகாரிகள் மத்தியில் உரையாற்றிய அமைச்சரும் புலிகளுடனான சமாதான முயற்சி பேச்சுவார்த்தைக் குழுவின் அரச தரப்பின் தலைவருமான பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு எட்டப்படுவதற்கு முன்பாக புலிகளின் ஆயுதக்களைவு வற்புறுத்தப்படும் என்பதைத் தெளிவுபடுத்தியிருந்தார். அத்துடன் புலிகள் மேற்கொண்டு வந்த பலவந்த ஆட்சேர்ப்புக்களும், ஜனநாயக விரோத செயற்பாடுகளும் பேச்சுவார்த்தையில் சம்மந்தப்பட்டிருந்த சர்வதேசசமூகத்திற்குமிகுந்தசங்கடத்தை கொடுத்துக் கொண்டிருந்தது. அத்துடன் இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதியை துக்கதினமாக கடைப்பிடிக்கும்படி புலிகள் விடுத்த வேண்டுகோளுக்கும் பொதுமக்கள் பெருமளவில் செவிசாய்க்கவில்லை.

இவ்வாறான நிலையில் ஈழமக்கள் ஜனநாயககட்சிக்கு (ஈபிடிபி) எதிராகநெடுந்தீவில் 81 தினங்களாக நடத்தி வந்த பிரச்சார போரைபுலிகள்பகிரங்கமாககைவிட்டனர். நெடுந்தீவு ஈபிடிபி அலுவலகத்திற்கு முன்பதாக தகரக் கொட்டகை அமைத்து பகலில் உண்ணாவிரதமும் இரவில் விருந்துபசாரமுமாக புலிகள் நடத்தி வந்த பிரச்சாரப்போரை தமிழ்காங்கிரஸின் தலைவரும் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி முடித்து வைத்தார்.

ஜேர்மனியின் தலைநகர் பெர்லினில் இருக்கும் நோர்வே தூதுவரகத்தில் இலங்கை அரச தரப்பும் புலிகளும் பேச்சுக்களுக்கு தயாராகிக் கொண்டிருந்த வேளையில் 06.02.2003 அன்று நெடுந்தீவுக் கடற்பரப்பில் மற்றுமொரு சம்பவம் இடம்பெற்றது. நெடுந்தீவுக் கடலில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய இருபடகுகள் கடற்படையினரால் அவதானிக்கப்பட்டது. கடற்படையினர் இப் படகுகளை நோக்கி முன்னேறிச் சென்ற போது ஒரு படகு பூனகரிப் பகுதிக்குத் தப்பிச் சென்றது. மற்றையது கடற் படையினர் சோதனை இடுவதற்கு முற்பட்டால் சயனைற் அருந்தி மரணிக்கப் போவதாக அப்படகில் இருந்தவர்கள் தெரிவித்தனர்.

தாங்கள் புலிகள் இயக்கத்தை சேர்ந்தவர்களென அறிமுகப் படுத்தியதோடு இப்பகுதியில் கடலட்டை பிடிக்கவே வந்திருப்பதாகவும் கூறினர். இந்நிலையில் கடற்படையினர் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் உதவியை நாடினர். போர்நிறுத்த கண்காணிப்பு குழுவினரும் ஸ்தலத்திற்கு விரைந்தனர். அதனிடையே படகிலிருந்து சில பொதிகள் கடலுக்குள் வீசப்பட்டன. ஸ்தலத்திற்கு விரைந்த கண்காணிப்பாளர்கள் புலிகளின் படகுகளில் ஏறினர். வீசப்பட்ட பொருட்கள் என்ன என்பதை விசாரித்தனர். தாங்கள் தற்பாதுகாப்பிற்காக எடுத்து வந்த ஆயுதங்களையே வீசியதாகக் கூறினர். இப்பகுதியில் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்ற வினாவுக்கு கடலட்டை பிடிக்க வந்திருப்பதாக கூறினர்.

ஆனால் கடலட்டை பிடிப்பதில் ஈடுபடுவதற்கான எதுவித தடயங்களையும் காணாத கண்காணிப்பாளர்கள் படகை சோதனையிட முற்பட்டனர். ஆனால் படகின் சிலபகுதிகளுக்குசெல்லவேண்டாமெ படகில் இருந்தவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். ஆனால் வேண்டுகோளை மீறி கண்காணிப்பாளர்கள் சோதனையிட முற்பட்ட போது படகு வெடித்து சிதற வைக்கப்பட்டது. வித்தியாசமான நடவடிக்கையை அவதானித்த கடல் கண்காணிப்பாளர்கள் கடலில் குதித்தனர். பின்னர் அவர்களை அவதானித்துக் கொண்டிருந்த கடற்படையினரால் காப்பாற்றப்பட்டனர்.

பெர்லினில் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்த புலிகளின் பிரதிநிதிகள் நடந்து முடிந்த சம்பவங்களுக்கு பதில் கூறமுடியாமல் விழிபிதுங்க வேண்டியதாயிற்று. மூழ்கிய புலிகளின் படகில் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் காணப்பட்டதாகப் பின்னர் தெரிய வந்தது. சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஒரு தருணத்தில் நெடுந்தீவு விமான எதிர்ப்பு ஆயுதங்கள் எடுத்துச் செல்லப்பட வேண்டிய அவசியம் ஏன் வந்தது? விடை தெரியாத வினா எழுந்தது.

இந்தப்பின்னணியில் பெர்லினில் சந்தித்துப் பேசிய அரச பிரதிநிதிகள், புலிகளின் பிரதிநிதிகள் மற்றும் நோர்வே அனுசரணையாளர்கள் சிறுவர்கள் ஆட்சேர்புகளுக்கு உள்ளாக்கப்படுவதை தடுப்பது மற்றும் உடனடி மனிதாபிமான புனரமைப்புத் தேவைகள் குறித்த உப குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இந்த அறிக்கையை படித்த பேராளர்கள் பெரும் திருப்தியை வெளியிட்டனர். அத்துடன் சிரான் உப குழுவின் செயற்பாடுகளுக்கு அரச திணைக்களங்கள் வழங்கிய ஒத்துழைப்பு குறித்தும் பாராட்டப்பட்டது. இறுதியாக வடக்கு கிழக்கு புனரமைப்புக்கான நிதியம் நிறுவப்படுவது குறித்து பேச்சுக்கள் எழுந்தது. இதற்கான நிதி அடுத்த வாரமளவில் கிடைக்குமென உறுதிப்படுத்தப்பட்டது. இந்த நிதியை விடுவிப்பதற்காக நன்கொடையாளர் எழுப்பும் கேள்விகள் மற்றும் தேவைப்பாடுகள் என்பன குறித்து விவாதிக்கப்பட்டு இவற்றை பூரணப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக இனங்காணப்பட்டது.

இவ்வேளை சிரான் உபகுழுவின் செயற்பாடுகள் குறித்த முஸ்லீம் சமூகத்தின் மத்தியில் இருந்தும் மாற்றுத் தமிழ் கட்சிகள் மத்தியில் இருந்தும் எழுப்பப்பட்ட சர்ச்சைகள் குறித்துப் பேர்லின் சந்திப்பின்போது கவனத்தில் கொள்ளப்பட்டதாக எதுவித தகவலும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து புலிகளால் சிறுவர்கள் படையணிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவது குறித்து ஆராயப்பட்டது. உளப்பூர்வமான அர்ப்பணிப்புடன் மிகக் கவனமாக இது குறித்து கலந்துரையாடப்பட்டது. இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் மேற்கொண்ட நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட தரப்புக்களால் பாராட்டுகளுடன் வரவேற்கப்பட்டது. மேலும் இது தொடர்பான நடைமுறை விடயங்கள் இருதரப்பினராலும் கலந்துரையாடப்பட்டது. யுனிசெப் அமைப்புக்கு வேண்டுகோள் விடுவதாக இணக்கம் காணப்பட்டது. யுனிசெப் இந்த செயற்பாடுகளை மேலும் முன்னெடுக்கவும் கண்காணிக்கவும் ஒத்துழைப்புவழங்கப்படுமென அரசாங்கம் மற்றும் புலிகள் தரப்பு பிரதிநிதிகள் ஏற்றுக் கொண்டனர். ஆனால் வடக்கு கிழக்கு மாகானத்தில் சிறுவர்கள் ஆட்சேர்ப்புக்கு இலக்காகுவதான முறைப்பாடுகளும் புகார்களும் தொடர்ந்தும் கிடைத்த வண்ணம் இருந்தன. பெர்லின் பேச்சுக்களின் இறுதியில் பெர்லினிலுள்ள நோர்வே துதுவரகத்தினால் வெளியிடப்பட்ட ஊடகக் குறிப்பு பின்வருமாறு தெரிவித்தது.

இலங்கை அரச தரப்பு பிரதிநிதிகளும் புலிகளின் பிரிதிநிதிகளும் பெர்லினிலுள்ள நோர்வே தூதுவரகத்தில் 2003 பெப்ரவரி 7ஆம் 8ஆம் திகதிகளில் ஐந்தாவதும் சுருக்கப்பட்டதுமான ஒரு சந்திப்பை மேற்கொண்டு கலந்துரையாடினர். கூட்டுறவு மற்றும் ஒத்துழைப்புக்கான மனோநிலையுடன் சிக்கலான விடயங்கள் குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டது.


கடலில் இடம்பெறும் சம்பவங்கள் குறித்து கவனத்தில் கொள்ளப்பட்டது. இத்தகைய சம்பவங்கள் இனியும் தொடர இடமளிக்கப்படமாட்டாது என்பதை மிக வன்மையாக உறுதிப்படுத்தினர். அதாவது நெடுந்தீவுக் கடலில் கடற்புலிகள் மூவர் உயிரிழக்கக் காரணமாக இருந்தது போன்ற சம்பவங்கள் இனி ஒருபோதும் இடம்பெறக்கூடாது என்பது வலியுறுத்தப்பட்டது. இந்த சம்பவத்தின் பாரதூரமான தன்மை குறித்து ஆராயப்பட்டது. புலிகள் மற்றும் போர்நிறுத்த கண்காணிப்புக்குழு என்பவற்றின் பிரதிநிதிகள் வெகு விரைவில் கூடி ஆராய்ந்து திருப்திகரமான பாதுகாப்பு வரையறைகளை ஏற்படுத்துவதென இணக்கம் காணப்பட்டது.

சிரான் எனப்படும் உப குழுவின் முன்னேற்ற அறிக்கை குறித்து பரிசீலனை செய்யப்பட்டது. வடக்கு கிழக்கில் அவசரமாக மனிதாபிமான மற்றும் புனரமைப்பு பணிகள் ...

**தொடர்வான்...**

# அரசதரப்புடன் த.தே.கூட்டமைப்பு பேச்சு நடத்தி வெற்றி காணுமா?

யுத்தம் முடிவுக்கு வந்துள்ள நிலையில் வடபகுதி மக்கள் எதிர்கொண்டுவரும் சவால்கள் ஏராளம். போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பான இறுதி முடிவு பற்றி அறியவேண்டிய நிலமை, காணாமல் போனோர் தொடர்பான இறுதி முடிவு, பொலிஸ் மற்றும் காணி அதிகாரம், காணி அபகரிப்பு, சிங்களக் குடியேற்றம், இராணுவத்தினரின் சிவில் நடவடிக்கைகள், வன்னிபிரதேசம் முப்பது வருட கல்வியை தொலைத்துள்ளமை, விவசாயிகள் தமது மீளுயிர்ப்புக்காக காத்துக் கிடக்கின்றமை, கரையோர மீனவர்கள் இந்திய மீனவர்களுடன் அன்றாடம் அல்லல்படுகின்றமை, யுத்தத்தின் விளைவுகளான விதவைகளும் அங்கவீனர்களும் ஆயிரக்கணக்கில் வாழ்வின் விளிம்புக்கே தள்ளப்பட்டிருக்கின்றமை, அனாதைகளாக்கப்பட்ட குழந்தைகளின் அரவணைப்பு இல்லங்களெல்லாம் அச்சந்தரும் காப்பாளார்களால் துஸ்பிரயோகம் செய்யப்படுகின்றமை, வேலைவாய்ப்பற்ற பல பட்டதாரிகள் இருக்கின்றமை, பொருளாதார அபிவிருத்தி என்பது முழுமையான அவசியமாக உள்ளமை, இப்படியாக வடபகுதித் தமிழ்மக்கள் எதிர்கொள்ளும் சவால்களை பட்டியலிடலாம்.



இறுதி யுத்தத்துக்கு பின்னர் வாழ்வின் மீதான அனைத்து நம்பிக்கைகளும் சிதறடிக்கப்பட்டு எதிர்காலத்தின் மீது எவ்வித நம்பிக்கையும் அற்று கிடந்த மக்களுக்கு மீண்டும் வாழ்வில் நம்பிக்கையை ஊட்டியதாக அமைந்தது வடக்கு மாகாண சபைத் தேர்தல். இது தமிழரின் உரிமைக்கான, சுயநிர்ணயத்துக்கான, தேசியத்தை காப்பதற்கான, முள்ளிவாய்க்கால் படுகொலைகளுக்கு நீதி கேட்பதற்கான, அரசுக்கு பாடம் கற்பிப்பதற்கான, தமிழரின் ஒற்றுமையை சர்வதேசத்துக்கு காட்டுவதற்கான தேர்தல் என்ற நோக்கங்களின் அடிப்படையில் நோக்கப்பட்டது. இதனால்தான் பாரிய வெற்றி பெறப்பட்டது. இந்நிலையில் வடமாகாணசபையின் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 2014க்கான வரவு செலவுத்திட்டத்தில் மற்றைய மாகாணங்களையும் விட வடமாகாணத்துக்கே கூடுதல் நிதியை அரசுஒதுக்கியுள்ளது. வடமாகாணத்திற்கு ரூபா 5.831மில்லியனும், சப்ரகமுவ மாகாணத்திற்கு ரூபா 4.580 மில்லியனும், மத்திய மாகாணத்திற்கு ரூபா 3.927 மில்லியனும், ஊவா மாகாணத்திற்கு ரூபா 3.873 மில்லியனும், கிழக்கு மாகாணத்திற்கு ரூபா 3.546 மில்லியனும், வட மத்திய மாகாணத்திற்கு ரூபா 3.393 மில்லியனும், மேல் மாகாணத்திற்கு ரூபா 2.755 மில்லியனும், வட மேல் மாகாணத்திற்கு ரூபா 2.470 மில்லியனும், தென் மாகாணத்திற்கு ரூபா 2.095 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆனால் இவை ஒருபுறமிருக்க அரசதரப்புடன் பேச்சு நடத்தி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறுமா என்பதில் நம்பிக்கையற்ற தன்மையே நிலவுகிறது. ஏனென்றால் இதுவரையில் நடைபெற்று முடிந்துள்ள பேச்சுவார்த்தைகள் அனைத்தும் எண்ணிக்கையை காட்டும் பேச்சுக்களாக அமைந்துள்ளனவே தவிர அதனால் எந்த நன்மைகளும் கிடைத்திருக்கவில்லை. மாறாக விடுதலைப்புலிகள் அமைப்பு அழிக்கப்பட்டதும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களின் உயிரிழப்புக்களும் ஊனங்களும் ஏற்பட்டதுதான் மிச்சம். இந்நிலையில் அரசதரப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி த.தே.கூட்டமைப்பு வெற்றிபெறுமா என்பது குறித்து நாம் நோக்கவேண்டியது அவசியமாகும்.

இன்றைய காலகட்டத்தில் அரசியல் நகர்வுக்கு ஏற்ற விடயங்களையே நாம் கோடிட்டுக் காட்டவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்பட்டிருக்கின்றோம். தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் த.தே.கூட்டமைப்பை பொறுத்த வரையில் வடமாகாணசபையை வைத்தே இனிக் கிடைக்கப்பெறும் தீர்வுகள் முன்னெடுக்கப்பட்டு அவை நடைமுறைக்கு வர இருக்கின்றன. அமைச்சர் சீ.வி விக்னேஸ்வரன் அடுத்தடுத்து எவ்வாறு செயற்படப்போகிறார் என்பது இன்றைய தமிழ்மக்கள் மத்தியில் கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது. இவர் தொடர்பாக மக்கள் தெரிவிக்கும் கருத்துக்களைப் பார்க்குமிடத்து முதலமைச்சர்சர்வாதிகாரியாகநடக்கிறார் என மாகாண சபை உறுப்பினர்கள் அனந்தி எழிலன் குறிப்பிட்டுள்ளமை விசேடமாக கவனிக்கத்தக்கது.

தவிரவும் கிழக்கு மாகாணத்தை மையாகக் கொண்டுதான் தமிழர் பிரச்சினை முதன்முதலில் ஆரம்பித்தது. காணி அபகரிப்பு சிங்கள குடியேற்றங்கள் கிழக்கில் ஆரம்பிக்கப்பட்ட போது தான் தமிழத்தேசிய கோட்பாடு, தமிழர் தாயம் பற்றிய சிந்தனைகள் எழுந்தன. இறுதிக்கட்டப் போரும் மாவிலாறு பிரச்சினையில்தான் ஆரம்பித்தது. ஆனால் இறுதிக் கட்ட போர் தொடர்பாகவும் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாகவும் இப்போது பேசப்படுகின்றது. ஆனால் கிழக்கு மாகாணம் என்பதும் வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சி என்ற பேச்சும் நலிவடைந்துள்ளன. தற்போது இனப்பிரச்சினை என்ற பேச்சு வடமாகாண பிரச்சினையாக மட்டும் மாறிவிட்டது. அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் வடபகுதியில் தினமும் நடக்கின்றன. ஆனால் கிழக்கில் இல்லை. ஆனால் வடபகுதியில் உள்ள அத்தனை பிரச்சினைகளும் கிழக்கிலும் உண்டு.

வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் வடமாகாண பிரச்சினை பற்றியே பேசுகின்றார். அது அவரது கடமை. அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொது வேட்பாளராக இருந்து வெற்றிபெற்றவர். அவர் எந்த ஒரு தமிழக் கட்சியினதும் தலைவரும் அல்ல. சாதாரண உறுப்பினரும் அல்லது அதனால் அவர் வடமாகாண பிரச்சினையை மட்டும் பேசுவதில் தவறு இல்லை. ஆனால் வடமாகாண பிரச்சினையை மட்டும் பேசும்போது இனப் பிரச்சினையின் மேற்சொன்ன அடிப்படை விடுபடுகின்றது. யாழ்ப்பாணத்துக்கு சென்ற பிரித்தானிய பிரதமர் வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினை என்று பேசவில்லை. அவர் வடமாகாண பிரச்சினை என்றுதான் பிரித்தானிய பாராளுமன்றத்தில் கூறினார். ஆகவே இன்றைய சூழலில் தமிழ்மக்களது பிரச்சினை வடபகுதி மக்களது பிரச்சினை என்றே மட்டுப்படுத்தப்பட்டு நோக்கப்படுகிறது.

மட்டுமன்றி அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ஏனைய அமைச்சர்களிடையேயும் கருத்து முரண்பாடுகள் தோன்றியுள்ளன. இவற்றைப் பார்க்கின்ற போது கொழும்பை மையப்படுத்தியும் இந்தியாவைதலைமையாகக்கொண்டுமே அமைச்சுத் தெரிவுகள் இடம்பெற்று வருவதாகவும் ஆயுதக் குழுக்களில் இருந்து வந்தவர்களை ஓரங்கட்டும் செயற்பாடுகளாகவும் விக்னேஸ்வரனின் செயற்பாடுகள் அமைந்துள்ளது.

பொதுத்தேர்தலின் போது த.தே.கூட்டமைப்புடன் ஒரே குடையின்கீழ் பதிவு செய்யப்படாது ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.பி.டி.பி, ஈரோஸ் போன்ற கட்சிகள் முன்வராது போனால் தமிழரசுக்கட்சி தனித்துவமாகப் போட்டியிட்டு அனைத்து மாவட்டங்களிலும் வெற்றிபெறும் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. அதற்கு உடந்தையாக இந்தியா போன்ற நாடுகளின் உதவியும் இருக்கும். அக்காலத்தில் விடுதலைப்புலிகளை போற்றிப் புகழ்பாடும் அளவுக்கு அரசாங்கம் வழிவகுத்துக் கொடுக்கும். அரசின் இலக்கு தமிழரசுக்கட்சியை சீர்படுத்தி சர்ச்சைகள் இல்லாத அரசியல் குழுவாக தமிழ்மக்கள் சார்பாக நிலைநிறுத்துவதே. மேற்குறிப்பிடப்பட்ட கட்சிகள் தனித்துப் போட்டியிட்டால் அவை ஆட்சியமைப்பதற்கு போதுமான வாக்குகளை பெற்றுக்கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

இவற்றை இலக்குவைத்தே இலங்கையரசின் செயற்பாடுகள் குறிப்பாக மஹிந்தவின் அரசியல் காய் நகர்த்தல்கள் விக்னேஸ்வரன், சம்மந்தன், சுமந்திரன் ஊடாக நகர்த்தப்பட்டு வருகிறது. இன்னொரு வடிவில் பார்க்கின்ற போது ஆயுதம் ஏந்திப் போராடிய போராளிகள் விடுதலைப்புலிகளுக்கு எதிராக இராணுவத்துடன் சேர்ந்து செயற்பட்ட ஒரு காலப்பகுதியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டி சுட்டிக்காட்டி அவர்களை ஓரங்கட்டுவதும் ஒரு நோக்காக இருக்கும். காரணம் இவ்வாயுதக்குழுக்கள் அவ்வாறு செயற்பட்டு மக்கள் மத்தியிலே வெறுப்பை ஏற்படுத்தியிருந்த நிலமை இல்லாமலில்லை. இந்த நிலையில்தான் தமிழரசுக்கட்சி முதன்மை பெறுகிறது. ஆனந்த சங்கரியின் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைதூக்குமா என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. இம்முறை நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலிலும் கூட அனைத்து தமிழ்கட்சிகளாலும் ஆனந்தசங்கரி ஓரங்கட்டப்பட்டார். ஆனால் அவரது அரசியல் அனுபவத்துக்கு நிகராக ஏனைய தமிழ்க்கட்சிகளில் ஒருசிலரே உள்ளனர்.

கடந்தகாலத்தில் சங்கரியின் செயற்படுகளைப் பார்த்தால் அரசுடனிருந்து அறிக்கைகளைவிடுவதும், மடல் எழுதுவதிலும் திறமையானவராக இருந்து வந்தவர். சந்திரிகா அரசு இருந்த காலகட்டத்தில் விடுதலைப்புலிகளின் சிவப்புப்பட்டியலில் இவரது பெயரும் பதியப்பட்டிருந்தது. அதன்பின்னர் 2004ஆம் ஆண்டு சமாதான காலகட்டத்தில் அனைத்து தமிழ்க்கட்சிகளும் ஒரே குடையின் கீழ் செயற்பட்டதுதான் வரலாறு. பிரபாகரனுடைய போராட்டம் தமிழ்மக்களுக்கான ஒரு போராட்டமாக அமையப் பெற்றிராவிட்டால் இன்று எந்தவிதமான பேச்சுமின்றி கேட்டுக்கேள்வியின்றி தமிழினம் அழித்தொழிக்கபட்டு தமிழினம் அடிமைவாழ்க்கை வாழும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும்.

இன்று மலையக மக்கள் ஆண்டாண்டு காலமாக எப்படி அடிமைகளாக வாழ்கிறார்களோ அப்படியான நலமைதான் நிகழ்ந்திருக்கும். தட்டிக்கேட்க ஒரு தலைவன் இருந்ததால் தான் இன்று தமிழினம் தலைநிமிர்ந்து நிற்கிறது. சம்மந்தனோ, விக்னேஸ்வரனோ அல்லது ஏனைய தலைவர்களோ இன்று அரசுடன் பாராளுமன்றில் பேசுகிறார்கள் என்றால் அது பிரபாகரனது போராட்டத்தின் பின்னணியில் தான் தங்கியுள்ளது என்பது உலகம் அறிந்த ஒரு உண்மை.

இன்றைய நிலவரங்களுக்கு அமைய தமிழ்மக்கள் மத்தியில் தீர்க்கப்படாத எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கிறது. இவ்வாறான காலகட்டத்தில் அரச தரப்புடன் பேச்சுக்களை நடத்தி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெற்றி காணுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது?

நெற்றிப்பொறியன்

# விடிவினைத் தேடும் மலையகம்

இந்தியாவும், இலங்கையும் பிரிட்டிசாரின் காலனியாதிக்கத்தின் கீழ் இருந்தபொழுது இலங்கை மலைப் பகுதியில் கோப்பி, தேயிலை, இறப்பர் போன்ற பணப்பயிர்கள் உற்பத்தி செய்வதற்காக, ஐரோப்பிய முதலாளிகளால், தமிழகத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட, இம்மக்களின் வழித்தோன்றல்களான இந்திய வம்சாவழித் தமிழர்களைத்தான் மலையகத் தமிழர்கள் என அடையாளப்படுத்துகின்றோம். இந்த வரைவிலக்கணத்தைக் கூறியே இன்று வரை மலையக மக்களை இலங்கைக்குரிய பிரஜைகளாக்காது இருக்கின்றோம் என்பதும் முக்கியமான விடயமாகும்.

இன்று இலங்கையில் வாழும் இந்திய வம்சாவழித் தமிழர்களின் எண்ணிக்கைசுமார்பதினைந்துஇலட்சம். பதினொரு மாவட்டங்களில் இம்மக்கள் வாழ்கிறார்கள். இன்று இம்மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் என்பதை விட இருநூறு ஆண்டுகளாக இவர்களின் முன்னோர்களும், இன்று வரை இவர்களும் பிரச்சினைகளை மட்டுமே சந்தித்து வருகிறார்கள் என்றே கூற வேண்டும். மக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களது பிரச்சினைகளின் எண்ணிக்கையும் அமைந்திருப்பது வேதனைக்குரியது.

இலங்கையின் அந்நிய வருவாயில் 26% ஈட்டித்தரும் இம்மக்கள், இன்றும் இரண்டாந்தர குடிமக்களாகவே நடத்தப்படும் நிலை, 150 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பழைமை வாய்ந்த குடியிருப்பு, ஏனைய சமூக மக்களின் வாழ்க்கைத் தரத்தோடு ஒப்பிடுகையில் போசாக்கற்ற உணவும் தரமற்ற குடியிருப்புகளும், குறைந்த நாள்கூலி, உத்தரவாதமற்ற வாழ்க்கை, கல்வியில் பாகுபாடு, அரசு வேலை வாய்ப்பில் பாகு பாடு, பெருந்தோட்டங்கள் துண்டாடல், சிங்களக் குடியேற்றங்கள், தமிழ்ப்பகுதியில் புத்தகோயில்கள், பால்வாடி(குழந்தை பராமாரிப்பு) நிலையங்களில் தமிழ்க் குழந்தைகளைப் பராமரிப்பதற்காகத் தமிழ்த் தெரியாத சிங்களப் பணியாளர்கள் நியமனம், தகுதி வாய்ந்த மாணவர்களுக்கும் உயர்கல்வி பெற முடியாத நிலை, பலவந்தக் கருத்தடை, சுகாதாரச் சீர்கேடு, போதிய மருத்துவ வசதியின்மை, நில உரிமை மறுப்பு, கொத்தடிமைத் தொழில்முறை, தோட்டப்பகுதிகளில் புதிய தொழிற்சாலைகள் உருவாக மறுப்பது, படித்த இளைஞர்களையும் தோட்டத் தொழில் செய்ய நிர்பந்திக்கும் அவலம், இரண்டு நூற்றாண்டுகளாகத் தக்க வைத்து வந்த மொழி, பண்பாட்டை இழக்கும் நிலை, பெருந்தோட்டங்கள் பராமரிப்பின்மை, மறுக்கப்பட்டுவரும் ஜனநாயக உரிமைகள், இனக்கலப்புத் திருமணங்கள், தொழிலாளர்களுக்கான வேலை நாள் குறைப்பு, விசேடதேவைக் குட்பட்டோரின் எண்ணிக்கை அதிகரிப்பு, அவர்கள் கவனிக்கப்படாமை போன்ற பல பிரச்சினைகளை இன்றும் எதிர்நோக்கியுள்ளார்கள். மேலும் மலை யகத் தமிழ் மாணவர்களுக்கென தனிப் பல்கலைக்கழகத்தை உருவாக்க மறுப்பது போன்ற அடிப்படையான கல்விப் பிரச்சினைகளும் தொடர்வதைக் காண லாம்.

1972 இல் பெருந்தோட்டங்கள் அரசுடைமை ஆக்கப்பட்டபோது இத்தோட்டங்களில் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேலாக மூன்று, நான்கு தலைமுறைகளாக வாழ்ந்து வந்த மக்கள் அம்மண்ணில் இருந்து துரத்தி அடிக்கப்பட்டனர். அரசு கையகப்படுத்திய பல தேயிலைத் தோட்டங்கள் துண்டாடப்பட்டுச் சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. இப்படி வழங்கப்பட்ட நிலங்களில் தமிழ்த் தொழிலாளியான ஒரு தோட்டத் தொழிலாளிக்குக் கூட நிலம் வழங்கப்படவில்லை.

மொழி உரிமை என்பதும் 2006ஆம் ஆண்டு இலங்கை அமைச்சரவை தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளையும் ஆட்சி மொழியாக அங்கீகாரம் அளிக்கும் சட்டத்தை நிறைவேற்றிய போதும் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு ஏழு ஆண்டுகளுக்கு மேலாகியும்பெருந்தோட்டப்பகுதிகளில் உள்ள அரசுத் துறைகளில் முழுமையாக இன்னும் அமுல்படுத்தப்படவில்லை.

இன்று மலையக மக்கள் மத்தியில் சிறு சிறு அபிவிருத்திகள் ஏற்பட்டிருந்தாலும் அவை முழுமை பெற எவ்வளவு காலம் எடுக்கும் என்பது தெரியாது. ஏனெனில் மலையக மக்களது அடிப்படைப் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை என்றே கூறவேண்டும். தோட்டங்களில் வேலை செய்துகொண்டு அதில் கிடைக்கும் வருமானத்தை மட்டுமே நம்பி வாழும் மக்கள் வறுமையின் பிடியில்தான் சிக்கியுள்ளனர். ஏனென்றால் இலங்கையில் சாதாரணமாக கூலித்தொழில் செய்யும் ஒரு நபருக்கு வழங்கப்படும் சம்பளத்தின் அளவை விடக் குறைந்த அளவிலான சம்பளமே இவர்களுக்கு கிடைக்கிறது. ஆக இச்சம்பளத்தைப் பெறுபவர்கள் குடும்பச்செலவுகளையும் பார்த்துக்கொண்டு கல்வி உட்பட ஏனைய செலவினங்களையும் ஏற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது. இன்றும் எத்தனையோ கிராமங்கள் ஒழுங்கான போக்குவரத்து வசதியின்மை, குடியிருப்பின்மை, மின்சாரவசதியின்மை என்று பல பிரச்சினைகளுடன் இருக்கின்றன.



இதனால்தான் தோட்டப் புறங்களில் வாழும் மக்கள் இன்று வேறு இடங்களை நோக்கியும் வேறு தொழில்களை நோக்கியும் செல்கின்றனர். ஆனால் தோட்டங்களில் வேலை செய்யாதுபோனால் அவர்களுக்கான குடியிருப்பு சலுகை வழங்கப்படாது என்ற காரணத்தால் யாராவது ஒரு வராவது தோட்டவேலை செய்து கொண்டு காலத்தை ஓட்டுகின்றனர்.

மலையகத்தில் இன்று வெளிப்படையாகத் தெரியும் மாற்றங்களில் ஒன்று என்று சொன்னால் அது மலையகக் கல்விவளர்ச்சி ஒன்று மட்டும் தான். உயர்கல்வி பெறுபவர்களின் எண்ணிக்கை இன்று அதிகரித்துள்ளது. அதேவேளை பாடசாலைக்கல்வியை இடைநிறுத்தும் மாணவர்களது எண்ணிக்கையும் மலையகத்திலேயே அதி கமாக உள்ளது. கற்ற சமூகத்தினரால் மலை யக மக்களது அரசியல் பிரச்சினைகள் தீர்க்கப்படுமா என்ற வினாவும் தோன்றியுள்ளது. ஏனெனில் இன்றைய மலையகப்பகுதி இளைஞர்களிடம் தமது வாழ்வு மலரவேண்டும் என்ற எண்ணம் முனைப்புப்பெற்றிருக்கிறது என்பது உண்மையே. ஆனால் அவை எவ்வளவு தூரம் சத்தியமாகும் என்று தெரியாது. மலையக இளைஞர்களுக்கு உதவக்கூடிய அரசியல் தலைமைகள் அங்கு இல்லை.

இன்னொரு தளத்தில் நோக்கில் எழுபது ஆண்டுகளுக்கு முன் உருவான தொழிற்சங்கங்களின் கீழும் இந்தத் தொழிற்சங்கத் தலைமையோடு முரண்பட்டு வெளியேறும் தலைமைகள் உருவாக்கும் தொழிற்சங்கங்களின் தலைமையின் கீழுமே மக்கள் அணிதிரட்டப்பட்டுள்ளார்கள். இவர்களது பிரச்சினைகள் தோட்ட நிர்வாகத்தோடுஎழும்பிரச்சினைகளோடு சம்பந்தப்பட்டவையாகவே நோக்கப் படுகின்றன. இப்பிரச்சினைகளைக் கையாள்வதும் தொழிற்சங்கங்கள்தான். தொழிற்சங்கங்களோடு இணைந்த இவர்களின் வாழ்க்கையில் மாற்றுச் சிந்தனைகள் உருவாக, அல்லது உருவாக்க முயல்வோர்களால் தொழிற்சங்கத் தலைமைக்கு ஆபத்து நேரிடும் எனச் சங்கத் தலைமைகள் எண்ணுகின்றன. இத்தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகள் போலவே தங்களை எண்ணுகின்றன. தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகள் போலவே செயல்பட்டுவருகின்றன. இம்மக்களின் பிரச்சினைகளை அரசியல் ரீதியாக முன்னெடுக்கும் அமைப்புகள் உருவாகாமல் இருப்பதற்கு இத்தொழிற் சங்கத்தலைமைகளே தடையாக இருந்து வருகின்றன. இதனால் இவற்றைக் கடந்து மக்களால் வெளியில் சென்று குரல் எழுப்ப முடியாதிருக்கிறது என்பதுதான் உண்மை. 1980களுக்குப் பின் உருவான சில அரசி யல் கட்சிகளும் மலையக மக்களை முழுமையாக அடையாளப்படுத்துவதாக இல்லை.

அண்மையில் பொதுநலவாய மாநாட்டுக்காக இலங்கை வருகை தந்த இளவரசர் சார்ள்ஸ் கண்டி, நுவரெலியா போன்ற மாவட்டங்களின் சில இடங்களைச் சென்று பார்வையிட்டார். அன்று விசேடமாக புதிய உடை அணிந்து தொழிலாளர்கள் வேலைக்கு வரவேண்டும் என்று பணிக்கப்பட்டிருந்தனர். தொழிலாளர்களும் அப்படியே வந்திருந்தனர். இதில் உண்மை விடயம் என்னவென்றால் மலையகத் தலைமைகளை எதிர்க்கும் சக்தி அங்குள்ள தொழிலாள மக்களிடம் இன்னும் ஏற்படவில்லை என்பதுதான். ஒருநாள் கூத்துக்காகமீசையைமொட்டையடிக்கச் சொன்னால் மொட்டையடிக்கவும் தயங்கமாட்டோம் என்பதே இந்நிலைப்பாடு. அதேவேளை இளவரசரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கபட்டது. இப்படி எத்தனை மகஜர் எத்தனை பேரிடம் வழங்கப்பட்டிருக்கிறது?

2014ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படப் போகிறது என்ற நிலையில் மலையக மக்களுக்கான சில நன்மைகள் கண்டிப்பாக அதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் என்றே கருதப்பட்டது. ஆனால் ஏமாந்துபோனதுதான் மிச்சம். ஏனென்றால்தோட்டத்தொழிலாளருக்கு 50,000 அலகுகளை கொண்ட வீட்டு தொகுதிகளை நிர்மாணிக்கும் யோசனையை முன்மொழிவதாக ஜனாதிபதி தெரிவித்தார். இது ஒன்றுதான் மலையக மக்களுக்காக முன்மொழியப்பட்ட யோசனையாக இருக்கிறது. ஆனால் இதன் உள்நோக்கம் அனைத்து மக்களுக்கும் விளங்கியிருக்குமா என்பது தெரியாது. ஏனென்றால் இத்தொடர் மாடி வீட்டு திட்டமானது தோட்ட தொழிலாளருக்கு மஹிந்த சிந்தனையில் உறுதியளிக்கப்பட்ட காணி உரிமை இன்னமும்வெகுதூரத்தில்இருப்பதையே அடையாளப்படுத்துகின்றது. அத்துடன் இவர்களது தோட்டங்கள் என்றுமே கிராமங்களாக மாறாது என்பதையும் இது கோடிட்டு காட்டுகிறது.

அண்மையில் அவிசாவளை பென்ரித் தோட்டத்தில் அமைந்துள்ள அவிசாவளை நகருக்கு நீர் விநியோகம் செய்யும் நீர்த்தாங்கியில் இடம்பெறும் குளோரின் வாயு கசிவினால் அப்பகுதி மக்கள் பாதிப்புக்குட்பட்ட செய்தி வெளிவந்தது. தற்போது மலையகத்தில் உள்ள பல இந்து ஆலயங்கள் கொள்ளையடிக்கப்பட்டு வருவதாக செய்திகள் வெளியாகின்றன. இவற்றின் நோக்கம் என்ன? என்பது மக்களுக்கும், மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைமைகளுக்கும் தெரியாமலிருக்க நியாயமில்லை.

மலையகத்தில் அரசியல் கட்சிகளுக்கிடையிலான வன்முறை அரசியல் உச்சத்தை அடைந்துள்ளமையையும் காண முடிகிறது. இந்த அரசியல் வன்முறைகள் மலையக மக்கள் முகம் கொடுத்துவரும் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்காது. தொடர்ந்துநீடிப்பதற்கான வாய்ப்பைதான் ஆட்சியில் உள்ள அரசாங்கத்துக்கும் ஆட்சிபீடத்தில் உள்ள மலையக தலைமைகளுக்கும் வழங்கும். ஆகவே விடிவினைத் தேடும் மலையக மக்கள் இதனால் எந்த நன்மைகளையும் அடையப்போவதில்லை. மாறாக மலையகத்துக்கான மனிதாபிமான செயற்பாடுகளை மேற்கொள்ள அங்குள்ள கட்சிகள் ஒன்றிணைய வேண்டும். மலையகத்திலிருந்து பல்வேறு வழிகளிலும்முன்னேறி உள்ளவர்கள் அந்த சமூகம் ஏமாற்றப்படாமல் இருப்பதற்கு உதவுவதற்காக முன்வர வேண்டும். மலையக மக்கள் வடபகுதி மக்கள் போல தமது எதிர்ப்புக்களை வெளிப்படுத்த முன்வரவேண்டும். மலையகக் கல்விச் சமூகம் மக்களின் தலைமைத்துவங்களாக மாறவேண்டும். தொழிற்சங்கங்கள் சார்பான சிந்தனைகளை மக்கள் கைவிட வேண்டும். இத்தகைய மாற்றங்கள் உடனடியாக ஏற்படவேண்டும். இவை மலையகம் மலர வழிவகுக்கும்.

அநாமிக்கா


# இறுதியுத்தத்தில் காணாமல் போனோர் தொடர்பில் அரசாங்கம் விபரம் திரட்டுகிறது

## ஒட்டுமொத்தமாக 30,000 பேர் காணாமல் போயுள்ளனர்

இலங்கையில் கடந்தகால போர்ச் சூழலில் இடம்பெற்ற இழப்புக்கள் குறித்த பதிவுகளைப் பொதுமக்களிடம் இருந்து திரட்டுவதற்காக புள்ளிவிபர திணைக்களத்தினூடாக உள்ளூராட்சி, உள்துறை அமைச்சு கணக்கெடுப்பை நடத்துகிறது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைவாக 1983ஆம் ஆண்டு முதல் 2009 மே வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற சொத்தழிவு, உயிரிழப்பு, காணாமற் போனவர்கள் தொடர்பில் கணக்கெடுக்கும் பணிகளை புள்ளிவிவரவியல் மற்றும் தொகை மதிப்பீட்டுத் திணைக்களம் நாடளாவிய ரீதியில் ஆரம்பித்துள்ளது.



கடந்த 1982ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டு வரையிலான 27 வருட காலத்தில் இடம்பெற்ற உயிரிழப்புக்கள், அவயவங்களின் இழப்புக்கள், சொத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள அழிவுகள், விவசாய தொழில்துறை மற்றும் வாழ்வாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்புக்கள் குறித்து, தகவல்களைத் திரட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை



எடுத்துள்ளது. குடும்பம் ஒன்றில் அனைவரும் உயிரிழந்திருந்தால், அந்தக் குடும்பத்தின் பதிவுகள் மேற்கொள்ளப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவரும் காணாமற்போனோரைக் கண்டறியும் குழுவின் காப்பாளரும், காணாமல் போனோர் சங்கத்தின் ஒரு அங்கத்தவருமான கிருஸ்ணப்பிள்ளை தேவராசா அவர்களை தினப்புயல் பத்திரிகை தொடர்புகொண்டு கேட்டபோது,

**கேள்வி :-** காணாமற்போனோர் தொடர்பில் எத்தகைய விபரங்கள் உங்களிடம் உள்ளன? எத்தகைய நடவடிக்கைகளை எடுத்துள்ளீர்கள் ?

**பதில் –** வவுனியா மாவட்டத்தில் காணாமற்போன 296 பேரின் விபரங்கள் அவர்களது புகைப்படங்கள், பிறப்புப்பதிவுப்புத்தகங்கள், வாக்குமூலங்கள் என்பன எம்மிடம் உள்ளன. அதேபோல யுத்தத்தின் போது காணாமற்போனோர் , வெள்ளைக் கொடியுடன் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற்போனோர், காயப்பட்டு இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டு காணாமற் போனோர், வெள்ளைவானில் கடத்தப்பட்டவர்கள், இராணுவப் புலனாய்வுப்பிரிவினரால் விசாரணை என அழைக்கப்பட்டு காணாமற்போனவர்கள் போன்ற வகைப்பாடுகளின் கீழ் காணாமல் போனவர்களின் முழுமையான விபரங்களை உள்ளடக்கியதான ஒரு மகஜரை நவநீதம்பிள்ளையிடம் கையளித்துள்ளோம்.

**கேள்வி :-** ஏனைய மாவட்டங்களில் காணாமற்போனோரைக் கண்டறிதல் தொடர்பான நடவடிக்கைகள் எப்படி உள்ளன?

**பதில் –** மன்னாரில் பிரஜைகள் குழுவினால் காணாமற்போனோர் தொடர்பான விபரங்கள் திரட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதுவரையில் 3200 இற்கும் மேற்பட்டவர்களின் விபரங்கள் திரட்டப்பட்டுள்ளன. ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் இவ்விபரம் ஒப்படைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கேள்வி :-** இறுதிப்போரில் காணாமற்போனோரின் எண்ணிக்கை 6000 என்று சொல்லப்படுகின்றது. அதேவேளை 30000 இற்கும் மேற்பட்டோர் இதுவரையும் காணாமற் போயுள்ளதாகக் கூறப்படுகின்றது. இவ்வெண்ணிக்கை தொடர்பாக என்ன கருதுகிறீர்கள்?

**பதில் –** 6000 பேர் என்று



சொல்லப்படுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது. நிச்சயமாக அதைவிட அதிகமான எண்ணிக்கையினரே காணாமற்போயுள்ளனர். இதுவரையில்காணாமற்போனோர்எண்ணிக்கை 30000 என்பதனையும் ஏற்கமுடியாது. ஏனென்றால் இவ்வெண்ணிக்கை காணாமற்போனவர்களை மட்டும் குறிப்பிடுவதாக இருக்கமுடியாது. இதில் இறந்தவர்களின் எண்ணிக்கையையும் உள்வாங்கலாம்.

**கேள்வி :-** அரசதரப்பு சார்ந்தவர்கள், காணாமற் போனவர்கள் என்று கூறப்படும் பலர் பெருந்தொகைப்பணத்தை செலவழித்து வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுவிட்டனர் என்றும், அப்படிச் சென்றவர்களில் சிலர் நாட்டுக்கு மீண்டும் திரும்பி வந்தபொழுது கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. இதுதொடர்பில் என்ன கூறுகிறீர்கள் ?

**பதில் –** இதனை ஏற்றுக்கொள்ளமுடியாது. காணாமற் போனோர் பட்டியலில் உள்ளவர்கள் நிச்சயமாக இப்படிச் செய்திருக்கமாட்டார்கள்.

**கேள்வி :-** அவுஸ்திரேலியாவிற்குப்படகில் சென்றோரில் 250இற்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டு நீர்கொழும்புச் சிறையில் உள்ளனர். இவர்களது வாக்குமூலங்களின் படி இவர்கள் அனைவரும் காணாமற்போனோர் பட்டியலில் உள்ளவர்கள் என்று கூறப்படுகிறது இது தொடர்பில் என்ன கூறுகிறீர்கள் ?

**பதில் –** காணாமற்போனோரைக் கண்டறியும் குழுவினால் பதியப்பட்டவர்களின் பட்டியுலில் இவர்கள் நிச்சயமாக இருக்கமாட்டார்கள் என்பதை நான் உறுதிப்படுத்துவேன். அத்துடன் வவுனியா மாவட்டத்தை பற்றி மட்டுமே நான் குறிப்பிடுகிறேன். ஏனைய மாவட்டங்கள் தொடர்பான முழுமையான விபரங்கள் எனக்குத் தெரியாது.

**கேள்வி :-** யுத்தத்தில் காணாமற்போன போராளிகள் தொடர்பான விபரங்கள் ஏதும் உங்களிடம் வழங்கப்பட்டுள்ளனவா ?

**பதில் –** இல்லை. போராளிகள் என்ற வகையில் ஒரு தகவலும் வழங்கப்படவில்லை. தமது பிள்ளைகள் காணாமல் போயுள்ளனர் என்ற முறையில்தான் அவர்களது பாதுகாவலர்கள் தகவல்கள் வழங்கியுள்ளனர்.

**கேள்வி :-** நவநீதம்பிள்ளை வருகைதந்திருந்த போதும், கமருன் வந்திருந்த போதும், பொதுநலவாய மாநாட்டின் போது வவுனியாவில் நடைபெறவிருந்த பாரிய ஆர்ப்பாட்டத்தின்போதும் இராணுவ மற்றும் பொலீஸ் தரப்பினரால் தமிழ்மக்களுக்கு பல முட்டுக்கட்டைகள் போடப்பட்டிருந்தன. இவற்றை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்?

**பதில் –** எமது நாட்டினைப் பொறுத்தவரையில் ஜனநாயகம் என்பது முற்றுமுழுதாக இல்லாத நிலையில் மனித உரிமைகள் மிகப்பெரிய அளவில் மீறப்பட்ட நிலையில் தனிநபர் சுதந்திரம் மறுக்கப்பட்ட நிலையில் நாடு பயணித்துக்கொண்டிருக்கின்றது.

**கேள்வி :-** காணாமற்போனோர் தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசுடன் இணைந்தோ அல்லது தனித்தோ என்ன நடவடிக்கையை எடுத்துள்ளது?

**பதில் –** அரசு இது தொடர்பில் ஒரு ஆணைக்குழுவை அமைத்திருப்பதாகக் கூறுகிறது. அதன் நகர்வு எப்படி இருக்கின்றதென எனக்குத் தெரியாது. அதுபோல தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நடவடிக்கைகளிலும் எமக்கு அக்கறை இல்லை. சிவில் அமைப்பு என்ற முறையில் நாம் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிடம் பேசியுள்ளோம். அவர்களும் தம்மால் முடிந்ததைச் செய்வோம் என்று கூறியுள்ளனர். நாம் மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் சிவில் அமைப்புக்களினூடாகவே இது தொடர்பிலான தீர்வினைக்காண முற்படுகிறோம்.

**கேள்வி :-** காணாமற்போனோர் தொடர்பில் ஜனாதிபதி அவர்களுடன் என்னமாதிரியான தொடர்புகளைக் கொண்டுள்ளீர்கள் ?

**பதில் –** எதிர்வரும் 10ஆம் திகதி மனித உரிமைகள் தினத்தை வவுனியாவில் கொண்டாடவுள்ளோம். இதன்போது மகஜர் ஒன்றை அரசாங்க அதிபரின் ஊடாக ஜனாதிபதிக்கு வழங்கவுள்ளோம். நாட்டின் அதிபர் என்ற வகையில் அவரால் நடவடிக்கை எடுக்கப்படவேண்டியது அவசியம் என்ற வகையில் ஜனாதிபதியினூடாக ஒரு முடிவினை எதிர்பார்க்கின்றோம்.

ஆனால் இது தொடர்பாக அரசாங்கம் நல்லதொரு முடிவினை எடுக்குமா? பாதிக்கப்பட்ட மக்களுக்கு எப்படியான நிவாரணத்தை அரசு வழங்கப்போகிறது? என்பவற்றைப் பொறுத்திருந்துதான் பார்க்க முடியும்.

நெற்றிப்பொறியன்

# கமலேஸ்சர்மாவின் சுயநலவாயமாநாடு

உலகில் பல பாகங்களிலிருந்தும் பலவிதப்பட்ட எதிர்ப்புக்கள் வந்து கொண்டிருந்த பொழுதிலும், கடந்த 15- 17 திகதிகளில், பொதுநலவாய நாடுகளின் 23வது கூட்டம், கொழும்பில் நடைபெற்று முடிந்துள்ளது. இக்கூட்டத்தை இலங்கையால் நிச்சயமாக கொழும்பில் நடத்துமளவிற்கு அவர்களது அரசியல், மனித உரிமை நிலைமைகள் இல்லை.

அப்படியானால் இக் கூட்டத்தை கொழும்பிலேயே நடத்தி முடிப்பதற்கு, பொதுநலவாய (சுயநலவாய) நாடுகளின் செயலாளர் நாயகமான கமலேஸ் சர்மாவும், இலங்கையின் தற்போதைய பாதுகாவலரும், சர்வதேச ஆதரவாளருமான அவுஸ்லங்கா (அவுஸ்திரேலியா) ஆகியவர்களது கடுமையான உழைப்பினால், இலங்கையின் உண்மை நிலைகளை மற்றைய நாடுகள் அறியாதவாறு மூடி மறைத்து, கூட்டத்தை நடத்தி முடித்துள்ளார்கள். கொழும்பில் நடைபெற்ற



பொதுநலவாய நாடுகளின் கூட்டத்தில் நடைபெற்ற பல சம்பவங்களை மனதில் கொள்ளும் அதே வேளை, கமலேஸ் சர்மாவும், (அவுஸ்திரேலியா) தற்பொழுது தன்னும், தாம் எவ்வளவு தூரம், பொதுநலவாய நாடுகளின் பெறுமதி வாய்ந்த கொள்கைகளை, தமது சுயநலத்திற்காக மாசுபடுத்தியுள்ளனர் என உணருகிறார்களா?

உண்மை என்னவெனில், கடந்த காலங்களில் பொதுநலவாய அமைப்பிலிருந்து, தற்காலிகமாக வெளியேற்றப்பட்ட நாடுகளின் யதார்த்த நிலைக்கு, 100மடங்கு மேலாகவே இலங்கையின் நிலை உள்ளது என்பதை தமிழீழ மக்கள் மட்டுமல்லாது, சர்வதேசமே கூறுகிறது. இலங்கை மிக மோசமாக சர்வதேச மனிதாபிமான, மனித உரிமைச் சட்டங்களை மீறியுள்ளதாக சர்வதேச சமுதாயம் மீண்டும் மீண்டும் கூறியதுடன், இலங்கை அரசு தனிநபர் சுதந்திரம், ஊடகச் சுதந்திரம் போன்றவற்றை மீறியுள்ள அதேவேளை, சமுதாயங்களுக்கு இடையில் இனத்துவேசத்தை தூண்டிவிட்டுள்ளதுடன், இலங்கையின் சமத்துவம் என்பது அறவே காணப்படவில்லையெனவும் கூறினார்கள்.

இலங்கையின் உண்மை நிலை என்னவெனில், கடந்த இரண்டு தசாப்தங்களாக ஐ. நா. மனித உரிமை நிபுணர்கள் இலங்கையின் விடயத்தில் கைது, சித்திரவதை, பாலியல் வன்முறை, தன்னிச்சையான ஆட்கள் காணாமல் போதல், படுகொலைகள், இடப் பெயர்வுகள் போன்ற விடயங்களில் தாராளமான அறிக்கைகள் வெளியாகியுள்ளன. இதே இடத்தில் ஐ. நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை, ஐ. நா. செயலாளர் நாயகத்தினுடைய அறிக்கை, ஐ. நா. மனித உரிமைச் சபையினால் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான இரு கண்டன தீர்மானங்கள், 2002ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வெளியான ஐ. நா. மனித உரிமை சபையின் பூளோக ஆய்வு அறிக்கை, கடந்த செப்டம்பர் மாதம் ஐ. நா. மனித உரிமை ஆணையாளரின் இலங்கைக்கான விஜயமும் அவருடைய அறிக்கையும், இலங்கையின் பிரதம நீதிபதி மீதான அரசின் அடவாடித்தனமான நடவடிக்கைகள் யாவும் இலங்கையில் பொதுநலவாயமாநாடு நடாத்துவது பொருத்தமற்றத்து என்பதை தெட்டத் தெளிவாக காண்பித்திருந்தன.

இந்நிலையின் பொதுநலவாய நாடுகளின் கூட்டத்தை அடாத்துத்தனமான முறையில், முன்பு பொதுநலவாய நாடுகளினால் இடைநிறுத்தி வைக்கப்பட்ட நாடுகளுடன் இலங்கையை ஒப்பீடு செய்யாது, செயலாளர் நாயாகம் கமலேஸ் சர்மாவும், அவுஸ்ரேலியாவும் கொழும்பில் நடத்தி முடித்துள்ளனர். இவர்களது இரவு பகலான அயராத உழைப்பும், திடகாத்திரமும் இறுதியில், இலங்கையின் மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள்யாவும், திருவங்கிளனப்படுபவரின் கம்பளத்தின் கீழ் மறைக்கப்பட்டுள்ளது. ஆகவே தான், இது பொதுநலமல்ல, சுயநலம். எம்மை போன்று பலர், பொதுநலவாய அமைப்பின் 8 வெளிநாட்டு அமைச்சர்களை கொண்ட, பொதுநலவாய அமைச்சர்களின் நடவடிக்கை குழு – சீமாக் எனப்படும் (Commonwealth Ministerial Action Group CMAG) குழுவின் பலவிதப்பட்ட முயற்சிகளை நன்கு அறிவார்கள்.

இக்குழு ஓர் அங்கத்துவ நாட்டின் சீர் கெட்ட நிலையை கவனத்தில் எடுத்து, விரும்பினால் அந்நாட்டை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பொதுநலவாய அமைப்பிலிருந்து நீக்கும் வேலைகளை முன்னெடுக்க கூடியவர்கள். ஆனால் துரதிஷ்டவசமாக, இலங்கை பற்றிய பல உண்மை நிலைகளை திரு கமலேஸ் சர்மா இவர்களிடமிருந்து மிகவும் கவனமாக மூடிமறைத்த விடயம் இறுதி நேரத்திலேயே யாவராலும் அறியப்பட்டது.

கமலேஸ் சர்மாவிற்கு ஒன்றை மட்டும் கூற விரும்புகிறேன். இலங்கைக்கு இந்தியாவின் உதவி மிகவும் அவசரமாக தேவைப்பட்ட வேளையிலேயே, ஏறக்குறைய இரண்டு தசாப்தங்களின் பின்னர், அன்று இலங்கையில் கடமையில் ஈடுபட்டு தமது உயிர்களை நீத்த 1200 இந்தியா சமாதானப்படை வீரர்களுக்கு, ஓர் நினைவு கட்டிடம் கொழும்பில் அமைக்கப்பட்டது. ஆனால் இத்திறப்பு விழாவிற்கு எந்த ஒரு இலங்கை அரசின் பிரதிநிதியும், இதனது அங்குரார்ப்பண வைபத்தில் கலந்து கொள்ளவில்லை. அதனது கரணத்தை இந்தியா காங்கிரசும், சோனியா காந்தி உட்பட அதனது தலைவர்கள் அறிந்திருந்தார்களோ தெரியவில்லை. ஜனாதிபதி ராஜபக்ஷவும் அவரது சகாக்களும் அன்றும் இன்றும் இந்தியா இலங்கை உடன்படிக்கை, இந்திய சமாதானப்படை இலங்கையில் நிலை கொண்டிருந்ததை அறவே எதிர்த்தவர்கள் இன்றும் எதிர்க்கிறார்கள்.

இந்தியா சமாதானப்படை வீரர்களுக்கு போன்று, சந்தர்ப்பம் சூழ்நிலை சரியாக ஏற்படும் வேளையில, ஜனாதிபதி ராஜபக்ச, கமலேஸ்சர்மாவிற்கும் கொழும்பில் ஓர் நினைவு கட்டிடம் அமைத்தால் யாரும் அதிசயப்பட வேண்டியதில்லை.தற்போதைய நிலையில், உலகின் புதிய அதிசயமானால், அது நிச்சயம் கொழும்பில் நடாத்தப்பட்ட பொதுநலவாய நாடுகளின் கூட்டமே என்பதை உலகின் நியாயவாதிகள் அறிவார்கள். கமலேஸ்சர்மாவும், அவுஸ்ரேலியாவும் ஒரு விடயத்தை நிச்சயம் ஒத்துக் கொள்வார்களென நம்புகிறேன். அதாவது, கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் 23வது கூட்டம் இறுதியானதுமல்ல, இதே வேளை பொதுநலவாய அமைப்பினதும், அதனது சீமாக் குழு, சிவில் சமூகத்தினரது செயற்பாடுகள் இவற்றுடன் முடிவுறப் போவதில்லை.

மொறீசியசை பொறுத்தவரையில் அங்கு வாழும் பத்துவிதமான சனத் தொகையை கொண்ட தமிழ் மக்களுக்கு, அவர்களது மொழியை பேச, எழுத வாசிக்க தெரியுமோ இல்லையோ, அதற்குரிய அந்தஸ்து மொறீசியஸில் வழங்கப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு, மொறீசியஸின் நாணயத்தில், ஆங்கில, தமிழ், இந்தி என்ற வரிசையில் மொழி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. ஆனால் 1998ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், மொறீசியஸின் மத்திய வங்கி, புதிதாக வெளியிட்ட நாணயத்தில் குறிக்கப்பட்டுள்ள மொழி வரிசையை மாற்றி – ஆங்கிலம், இந்தி, தமிழ் என்ற வரிசையில் அச்சிட்டு வெளியிட்ட வேளையில், மொறீசியஸ் வாழ் தமிழ் மக்கள், அதை எதிர்த்து போராட்டங்கள் நடத்தியதன் பலனாக, புதிதாக அச்சிடப்பட்ட நாணயம் வாபஸ் பெறப்பட்டு, வழமையான வரிசையில் ஆங்கில, தமிழ், இந்தி என்ற முறையில், நாணயம் மீண்டும் வெளியிடப்பட்டது. இவ்விடயம் மொறீசியஸ் வாழ் தமிழ் மக்களுடைய மொழி உணர்வை உலகிற்கு எடுத்து காட்டுகிறது.

இன்று நேற்று அல்ல, மிக நீண்ட காலமாக மொறீசியஸ் வாழ் தமிழ் மக்கள் என்றும் தமிழீழ விடுதலை போராட்டத்திற்கு ஆதாரவானவர்கள். இதனால் தான், 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐ. நா. மனித உரிமை சபையில் முதல் முதலாக, இலங்கை மீது, அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட கண்டனப் பிரேரணைக்கு ஆதரவாக மொறீசியஸ் அன்றே வாக்களித்திருந்தது. பொதுநலவாய நாடுகளின், 24வது கூட்டம், மொறிசியஸில் நடைபெறவிருந்த போதிலும், கடந்த வாரம் பொதுநலவாய கூட்டத்தில், இதை ஐரோப்பிய யூனியனின் அங்கத்துவ நாடான மோல்ட்டாவில் 2015ஆம் ஆண்டு நடத்துவதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகத்தின் கடமைக் காலம் ஆகக் கூடியது எட்டு வருடங்களென நம்புகிறேன். ஒருவருடைய பதவிக் காலத்தை ஆயுட்காலமாக எப்படியாக ஏமாற்று வித்தைகளை மூலம் நீடிக்க முடியும் என்பதை, ராஜபக்ஷக்களிடமிருந்து பயிற்சி பெற்றிருக்காவிடில், கமலேஸ்சர்மாவின் பதவிக் காலம் நிச்சயம் 2016ஆம் ஆண்டு முடிவுறும்.

இதுவரையில் கமலேஸ்சர்மாவினாலும், அவுஸ்ரேலியாவினாலும் கவனத்தில் கொள்ளாத ஓர் உண்மையை, இவர்களுக்கு எடுத்து கூற விரும்புகிறேன். ஐ. நா. மனித உரிமை பொதுமன்றங்களை பொறுத்தவரையில், உலகில் மிக மோசமான மனித உரிமை மீறல்களை கொண்ட நாடுகளில் சிறிலங்காவும் ஒன்று. ஆனால் மிக நீண்டகாலமாக இலங்கையினது பலவிதப்பட்ட நரித்தனமான நாகுக்கான வேலைதிட்டங்கள் மூலம், ஐ. நா.வின் பொறிமுறைகளிருந்து இலங்கை தொடர்ந்து தப்பி வந்தது. ஐ. நா. மனித உரிமை சபையின் 1ஆவது கூட்டத் தொடரில், 2006ஆம் ஆண்டு, ஐரோப்பிய யூனியனின் சார்பாக பின்லாந்து, ஓர் கண்டனப் பிரேரணயை சிறிலங்கா மீது கொண்டு வருவதற்கு தயார் செய்யப்பட்டது. ஆனால் தமிழர் விடயங்களில் மட்டும் உள்நாட்டு தீர்வுகளில் நம்பிக்கை கொண்ட ஜனாதிபதி ராஜபக்ஷ, ஐரோப்பிய யூனியனினால் கொண்டு வரப்பட்ட கண்டனப் பிரேரணக்கு சமமானதேன ஓர் மழுப்பல் தீர்வை முன்வைத்தார்.

அதாவது, ஐரோப்பிய யூனியனினால் முன்வைக்கப்பட்ட விடயங்களுக்கு தாங்கள் உள்நாட்டில், சர்வதேச சுதந்திரமான புகழ்மிக்க நபர்கள் குழு (International Independeent Group of Eminent Persons IIGEP) ஒன்றின் கண்கணிப்புடன் தாம் நடவடிக்கைகள் எடுப்போம் என்றார்கள். இலங்கையின் விடயத்தில் என்றும் ஏமாளியான ஐரோப்பிய யூனியனும், சர்வதேச சமுதாயமும் அதற்கு ஒப்புக்கொண்டு, இலங்கை மீது ஐரோப்பிய யூனியனினால் கொண்டுவரவிருந்த கண்டனப் பிரேரணை கைவிடப்பட்டது. ஆனால் சர்வதேச சிவில் சமூகம் இது வழமையான இலங்கையின் கண் துடைப்பு மட்டுமல்லாது, காலம் கடத்தும் வேலையென உடனே கூறினார்கள்.

ஜனாதிபதி ராஜபக்ஷவினால் இக்குழு 2007ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டு, அதனது தலைவராக, இந்தியாவின் 17வது பிரதம நீதிபதியான, திரு. பி. என். பகவதி கடமையாற்றினார். ஒரு வருட காலத்தை, இலங்கை இக்குழுவின் பெயரால் கடத்தினர். இக்கால கட்டத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷ, தனக்கு கைதேர்ந்த பிரித்து ஆளும் தந்திரத்தை, இச்சர்வதேச சுதந்திரமான புகழ்மிக்க நபர்கள் குழுவின் அங்கத்தவர்கள் மீது நிறைவேற்றும் முயற்சிகள் மேற்கொண்டு தோல்வியடைந்தார். அவர்கள் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் போன்றவர்கள் அல்லாத காரணத்தில், அவர்களை விலைக்கு வாங்கும் ராஜபக்ஷவின் தந்திரம் வெற்றி அளிக்கவில்லை. இவற்றில் தோல்வி கண்ட ராஜபக்ஷ, தனது சகாவான, காலம் சென்ற முன்னாள் சட்டமா அதிபரான திரு சில்வாவை, ஜெனிவா ஐ. நா. மனித உரிமை சபையின் கூட்டத்திற்கு அனுப்பி, அக் குழுவின் வேலைத் திட்டங்களை மிக கடுமையாக விமர்சித்தார்கள். இதற்கு அக்குழுவின் அங்கத்தவர்களும் அங்கு பிரசன்னமாகி விளக்கங்கள் கொடுத்தார்கள்.

இறுதியில் இக்குழு, 2008ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி, ஓர் விளக்கங்களுடனான அறிக்கையை வெளியிட்ட பின்னர், இவ் குழுவின் (IIGE) வேலைகள் இலங்கையில் முடிவுக்கு வந்தது. இவ்விடயம் ஐ. நா. மனித உரிமை சபை உட்பட, உலகின் கண்கள் காதுகளை, ராஜபக்ஷ அரசு மீது, திறக்க வைத்தது. பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகமான கமலேஸ்சர்மா, ஜனாதிபதி ராஜபக்ஷவின் தந்திரங்கள், ஏமாற்று வித்தைகளை மேலும் அறிய விரும்பினால், இந்தியாவின் முன்னாள் பிரதம நீதிபதியான, திரு. பி. என். பகவதியிடம் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

இறுதியில், சர்வதேச சமுதாயத்தை மடையர்களாக எண்ணி, ஜனாதிபதி ராஜபக்ஷவினால் கடைபிடிக்கப்பட்டு வந்த சகல தந்திரங்களும் ஏமாற்று வித்தைகளும், ஐ. நா. மனித உரிமை சபையில் அடுத்தடுத்து நிறைவேற்றப்பட்ட இரண்டு கண்டன பிரேரணைகள் அடுத்து முடிவிற்கு வந்துள்ளது. எது என்னவானாலும், கொழும்பில் நடந்து முடிந்த பொதுநலவாய மாநாடு, இலங்கைக்கு வெற்றியையோ, கீர்த்தியையோ ஏற்படுத்துவதற்கு மாறாக, பல வெட்கக்கேடுகளையே உருவாக்கியுள்ளது. முதலாவதாக, பொதுநலவாயத்தை ஆரம்பித்த நாடுகளில் ஒன்றான கனடா, இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் கூட்டத்தை புறக்கணித்ததைதொடர்ந்து, இந்தியா, மொறீசியஸ் ஆகிய நாடுகளும் புறக்கணித்தன. இரண்டாவதாக, கொழும்பில் நடைபெற்ற இம்மாநாட்டில், 53 அங்கத்துவ நாடுகளில், 23 நாடுகளின் தலைவர்கள் மட்டுமே கலந்து கொண்டுள்ளார்கள்.

முன்பு நடைபெற்ற பொதுநலவாய கூட்டங்களுடன் ஒப்பிடும்பொழுது, பொதுநலவாயத்தின் சரித்திரத்திலேயே, மிக குறைவான நாட்டின் தலைவர்கள் கலந்து கொண்டது இதுவே முதல் தடவையாகும். இது இலங்கையின் மனித உரிமை மீறல்களுக்கும், போர்க்குற்றம் பற்றிய குற்றச்சாட்டிற்கு கிடைத்த பலனே. மூன்றவதாக, பொதுநலவாய நாடுகளின் பெயரில் இலங்கைக்கு சென்ற பல வெளிநாட்டு ஊடகங்களும், முக்கிய பிரதிநிதிகளும் வடக்கிற்கு நேரில் சென்று, அம்மக்களது உண்மை நிலைகளையும், போரின் போது ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களை அறிந்து, உடனுக்குடன் தமது சர்வதேச ஊடகங்கள் மூலம் காண்பித்துள்ளார்கள். இதில் விசேட்மாக பிரித்தானியாவின் சனல் 4, ஜரிவி போன்றவை முக்கிய பல விடயங்களை எடுத்துக் கூறியுள்ளார்கள்.

நான்காவதாக, பிரித்தானிய பிரதமர் திரு டேவிட் கமரூன் உட்பட பல முக்கிய புள்ளிகளை வடமாகண சபையின் முதலமைச்சர் திரு விக்னேஸ்வரன் சந்திப்பதற்கும், தமிழீழ மக்கள் தமது ஆதங்கம் எண்ணங்களை பிரதிபலித்து கண்டனங்களை எழுப்ப அருமையான சந்தர்ப்பம் ஏற்பட்டது. அத்துடன், பெரும் எண்ணிக்கையில் பத்திரிகையாளர் கொலை செய்யப்பட்டும், தாக்கப்பட்ட உதயன் பத்திரிகைக்கு டேவிட் கமரூன் நேரில் சென்று நிலைமைகளை பார்வையிடவும் சந்தர்ப்பம் உருவாக்கப்பட்டது.

[illegible] ஆம் பக்கம் பார்க்க...

*ச. வி. கிருபாகரன், பிரான்ஸ்*

# பிராந்தியச் செய்திகள்

## கைவிடப்பட்ட காணியிலிருந்து கைக்குண்டுகள் மீட்பு



ஏழாலை கிழக்கு பகுதியில் உள்ள கைவிடப்பட்ட பற்றைக் காணியில் இருந்து கைவிடப்பட்ட நிலையில் கைக்குண்டுகள் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஏழாலை கிழக்கு புனித இசிதோர் பாடசாலைக்கு அருகாமையில் உள்ள பராமரிப்பற்ற காணியை அயல் காணிக்காரர் துப்பரவு செய்ய முயன்ற வேளையில் குண்டுகள் ஆறும் வயர்கள் ஒரு தொகுதியும் காணப்படுவதை கண்டுள்ளார்கள்.

இதனைத் தொடர்ந்து இப்பகுதி கிராம அலுவலருக்கு தகவல் கிடைக்கப்பட்டதைத் தொடர்ந்து சுன்னாகம் பொலிசாருக்கு கிராம அலுவலரினால் தகவல் அறிவிக்கப்பட்டது. குறிப்பிட்ட இடத்திற்கு விரைந்த பொலிசார் குண்டுகளை மீட்டதுடன் இராணுவத்தினருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து இராணுவத்தினர் குண்டுகளை எடுத்துச் சென்றுள்ளார்கள்.

இது தொடர்பாக சுன்னாகம் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள்.

## ஹெரோயினுடன் சட்டத்தரணி கைது



மூன்று பைக்கற்றுகள் ஹெரோயினுடன் சட்டத்தரணி என்று கருதப்படும் ஒருவரை அநுராதபுர பொலிஸார் கைது செய்துள்ளனர்.

35 வயதாக இவர் திருமணம் முடித்த நபர் என்று தெரிவிக்கப்படுகின்றது. சாலியபுர பரசங்கஸ்வெவ வீட்டில் வைத்தே குறித்த நபரை விசாரணைக்காக கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரகசிய தகவல்களை அடுத்தே அவரை கைது செய்துள்ளதாக தெரிவித்த பொலிஸார் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாகவும் தெரிவித்தனர்.

## மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் கொள்ளை



யாழ் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் செவ்வாய்க்கிழமை (30 அதிகாலை கொள்ளைச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளமை தொடர்பில் கொடிகாமம் காவல்துறை நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதிகாலை 2.00 மணியளவில் வாகனமொன்றில் வந்த கொள்ளையர்கள் பாடசாலையில் காவலாளியை கட்டிவைத்துவிட்டு பாடசாலை உபகரணங்களை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், குறித்த பகுதியில் உள்ள 3 வீடுகளில் கொள்ளையர்கள் கொள்ளையடிக்க முற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை சுன்னாகம் சூராவத்தைப் பகுதியில் வீடொன்றினுள் திங்கட்கிழமை (03) அதிகாலை 1 மணிக்கு புகுந்து கொள்ளையிட முனைந்த இளைஞர் ஒருவரை அப்பகுதி மக்கள் மடக்கிப்பிடிக்கப்பட்டு சுன்னாகம் காவல்துறையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவங்கள் தொடர்பில் காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வவு.வேப்பங்குளத்தில் துப்பாக்கிச்சூடு



வவு.வேப்பங்குளம் யாழ் ஐஸ்கிறீம் ஹவுஸ் வீதியில் வசிக்கும் கமலநாயகி சிவானந்தசிவம் என்பவர் (முன்னாள் கிராமசேவையாளர்) கடந்த 04 ஆம் திகதி இரவு 8.45 மணியளவில் அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இதில் காயமடைந்த அவர் வவுனியா ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியா மாவட்ட பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

### அறிவித்தல்

**தினப்புயல் பத்திரிகை நிறுவனத்தில் பணிபுரிந்த முன்னாள் ஊழியர்களின் கவனத்திற்கு,**

உங்களுக்கு எமது நிறுவனத்தால் வழங்கப்பட்ட **அடையாளஅட்டை, நியமனக் கடிதம்** உட்பட அனைத்து ஆவணங்களையும் இம்மாத இறுதிக்குள் [31.12.2013] கொண்டுவந்து ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். குறிப்பிட்ட திகதிக்குள் ஒப்படைக்கத் தவறியவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

நிர்வாகம்

## திருமலை மாணவர் படுகொலை வழக்கு ஒத்திவைப்பு




2006ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதியன்று திருகோணமலையில் 5 மாணவர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விடுவிக்கபட்ட 12 அதிரடிப்படையினரும் (03.12.13) திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் நீதவான் ஏ.எல். அஸ்ஹர் முன்னிலையில் மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணைகளின் பின்னர் வழக்கு எதிர்வரும் ஜனவரி 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

2006ஆம் ஆண்டு திருகோணமலை கடற்கரையில் வைத்து 5 மாணவர்களையும் கொலை செய்த குற்றச்சாட்டே 12 படையினர் மீதும் சுமத்தப்பட்டுள்ளது.

கொலை செய்யப்பட்ட மாணவர் ஒருவரின் சார்பில் சட்டத்தரணியும் பதில் நீதவானுமாகிய சுபாசினி தனது சாட்சியத்தினை முன்வைத்தார். கொலை செய்யப்பட்ட மாணவரில் ஒருவர் தனது அக்காவின் மகன் எனக் கூறி தனது சாட்சிகளை முன்வைத்ததுடன் தான் உறவினர் என்று மட்டுமல்லாது பதில் நீதவானாகவும் சம்பவ இடத்திற்கு சென்றபோது அங்கு திட்டமிட்ட கொலைதான் நடந்தது எனவே சம்மந்தப்பட்டவர்களுக்கு தகுந்த தண்டனைகள் வழங்க வேண்டும் எனவும் கூறினர்.

## மூதூரில் 17 பணியாளர்களைக் கொன்றது இராணுவமே - அக்சன் பெய்ம் குற்றச்சாட்டு



மூதூரில் தமது பணியாளர்கள் 17 பேரையும் சுட்டுப்படுகொலை செய்தது இலங்கை இராணுவமே என்று முதல்முறையாக வெளிப்படையாக குற்றம்சாட்டியுள்ள பிரெஞ்சுத் தொண்டர் நிறுவனமான அக்சன் பெய்ம் (பட்டினிக்கு எதிரான நடவடிக்கை ஏசிஎவ்), இதுகுறித்து அனைத்துலக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரியுள்ளது.

2006ஆம் ஆண்டு மூதூரில் தமது பணியாளர்கள் 17 பேரும், இலங்கைப் படையினரால் வரிசையாக முழங்காலில் நிறுத்தப்பட்டு, ஒவ்வொருவராக தலையில் சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்டதாக ஏசிஎவ் குற்றம்சாட்டியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அனைவரும் தமிழர்கள் என்றும், அவர்களின் பெயர்கள் மற்றும் ஒளிப்படங்களையும் ஏசிஎவ் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

கடந்த 2006 ஓகஸ்ட் 4ஆம் நாள் காலை 7 மணியுடன், மூதூரில் இருந்த தமது குழுவுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டு விட்டதாகவும், ஏசிஎவ் தெரிவித்துள்ளது. சில நாட்களின் பின்னர், தமது பணியாளர்கள் 17 பேரும் சடலங்களாக மீட்கப்பட்டிருந்ததாகவும், ஏசிஎவ் வளாகத்தில் வரிசையாக நிறுத்தப்பட்டு, நெருக்கமாக நின்று அவர்கள் சுடப்பட்டு கொல்லப்பட்டுள்ளதாகவும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நேரடி மோதல்கள் நடந்த பகுதியில் இருந்து இவர்கள் விலகியே இருந்ததாகவும், அங்குமிங்குமாக சிதறிப் பறந்த துப்பாக்கி ரவைகளால் தமது பணியாளர்கள் கொல்லப்படவில்லை என்றும் ஏசிஎவ் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆயுதம் தரிக்காத அவர்கள், வெள்ளை நிற ஏசிஎவ் சின்னம் பொறித்த, ரிசேட்களை அணிந்திருந்த போதிலும், அவர்கள் இலக்கு வைத்துக் கொல்லப்பட்டுள்ளார்கள் என்றும் இந்த அறிக்கையில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இந்த கொலைகள் தொடர்பான விசாரணைகள் நடத்தும் எந்த முயற்சிகளையும் சிறிலங்கா படையினரும், காவல்துறையினரும் தடுத்து வந்துள்ளதாகவும் ஏசிஎவ் தெரிவித்துள்ளது.

இவர்களைக் கொன்ற கொலையாளிகளை சிறிலங்கா அரசு இதுவரை பாதுகாத்து வருகிறது என்றும், அது குற்றம்சாட்டியுள்ளது. இந்தத் தகவல் நேரில் கண்டவர்களிடமிருந்தும், இரகசிய ஆவணங்களில் இருந்தும், அரசாங்க வட்டாரங்களிலிருந்தும் தமக்குக் கிடைத்துள்ளதாக ஏசிஎவ் குறிப்பிட்டுள்ளது. இது ஒரு நீதி விசாரணைக்குப் பதிலானது அல்ல என்பதால், கொலையாளிகளின் பெயர் விபரங்களை வெளியிட முடியாது என்றும் ஏசிஎவ் தெரிவித்துள்ளது.

இந்தப் படுகொலைகள் தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் நியாயமான விசாரணைகளை நடத்தும் என்ற எதிர்பார்ப்பு பொய்த்துப் போய் விட்டதாகவும், அவை வெறும் நாடகம் என்று அம்பலமாகி விட்டதாகவும் ஏசிஎவ் குற்றம்சாட்டியுள்ளது.

இந்தநிலையில், இந்தப் படுகொலை தொடர்பாக அனைத்துலக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் ஏசிஎவ் கோரிக்கை விடுத்துள்ளது.

## யாழில் காதல் ஜோடி கைது




வாழைத் தோட்டத்தில் சல்லாபத்தில் ஈடுபட்ட காதல் ஜோடியொன்று கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளது.

யாழ். உரும்பிராய் பகுதியிலுள்ள வாழைத் தோட்டம் ஒன்றுக்கு முச்சக்கரவண்டியொன்றில் நேற்று வந்த காதல் ஜோடியொன்று முறைகேடாக நடந்துகொண்டதை அவதானித்த அப்பகுதி மக்கள் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர்.

அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் 22 வயதுடைய காதலனையும் 21 வயதுடைய காதலியையும் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர். இவ்விருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.




## பிரபுதேவாவை நடனமாட வைத்த ஷாருக்



இந்தியில் ஷாருக்கான் நடித்த ஓம் சக்தி ஓம் படத்தை இயக்கியவர் பரா கான். இவர் தற்போது ஷாருக்கானுடன், அபிஷேக்பச்சன், தீபிகா படுகோன் ஆகியோரையும் இணைத்து ஹப்பி நியூ இயர் என்றொரு படத்தை இயக்கி வருகிறார். நடனத்தை மையமாகக் கொண்ட இந்த படத்தில் பிரபுதேவா வுடன் ஒரு நடனம் ஆடினால் சிறப்பாக இருக்கும் என்று தனது விருப்பத்தை இயக்குனரிடம் தெரிவித்தாராம் ஷாரு க்கான். அதையடுத்து, பிரபுதேவாவிடம் இயக்குனர் பேச, எந்த யோசனையும் இன்றி உடனே சம்மதம் சொல்லி விட்டாராம். தற்போது இந்தியில் பிர பல டைரக்டர் என்கிற அளவுக்கு முன்னணியில் இருக்கும் பிரபு தேவா, தனது முதல் அடையாளமான நடனத்தை தான் இயக்கும் படங்களில் தோன்றி வெளிப்படுத்தி வருவதால், அவரது நடனத்துக்கும் பாலிவூட்டில் ஒரு இரசிகர் வட்டம் உருவாகியுள்ளதாம்.

அதனால்தான் பிரபுதேவாவும் தனது படத்தில் இடம்பெற்றால் அதுவே படத்துக்கு பெரிய பலமாக இருக்கும் என்று கருதினாராம் ஷாருக்கான். இது ஷாருக்கானின் தனிப்பட்ட விருப்பம் என்பதால், தான் பிசியாக இருந்தபோதும் அவர்கள் சொன்ன நாளில் சென்று ஆடிக்கொடுத்திருக்கிறாராம் பிரபுதேவா

## ஹன்சிகாவின் பலே சாதனை



மான்கராத்தே படத்திற்காக விதவிதமான ஐந்து பைக்குகளை ஓட்டி சாதனை படைத்திருக்கிறாராம் ஹன்சிகா. திருக்குமரன் இயக்கும் திரைப்படம் மான்கராத்தே.

இப்படத்தில் சிவகார்த்திகேயன் ஹீரோவாக நடிக்க இவருக்கு ஜோடி போட்டுள்ளார் ஹன்சிகா. அனிருத் இந்தப்படத்திற்கு இசையமைக்கிறார். இந்தப்படத்திற்காக சமீபத்தில் சிவகார்த்திகேயன், ஹன்ஷிகா சம்பந்தப்பட்ட அக்மார்க்சென்னைப்பாடல் ஒன்றை பைக்கை மையமாக வைத்து படமாக்கியிருக்கிறார்கள்.

இந்தப்பாடலில் 500சிசி புல்லட்டிலிருந்து பாரின் பைக் வரை விதம்விதமான ஐந்து பைக்குகளை ஓட்டி சாதனை படைத்திருக்கிறாராம் ஹன்ஷிகா. மேலும் பாடல்காட்சி படமாக்கப்படுவதற்கு முன்னதாக வெறும் ஒரு மணி நேரம் மட்டுமே இதற்காக பயிற்சி எடுத்துக்கொண்ட ஹன்ஷிகா பாடல்காட்சிகளில் பிரமாதமாக பைக் ஓட்டி அசத்தியுள்ளாராம்.


## காதலர்தினத்தில் பூங்கொத்துடன் விஷ்வரூபம்– 2



காதலர் தினத்தில் இரசிகர்களுக்கு பூங்கொத்து கொடுக்க வருகிறது விஸ்வரூபம் 2. ஜில்லா, வீரம் படங்கள் பொங்கலுக்கு ரிலீஸ் ஆகின்றன. கோச்சடையான் படத்தை ஜனவரி 26ல் ரிலீஸ் செய்வதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன. இந்தப் படங்கள் ரிலீஸ் ஆன பிறகு விஸ்வரூபம் 2 படத்தை வெளியிடப் போகிறார்களாம்.

கமல், அண்ட்ரியா, பூஜா குமார் உட்பட பலர் நடித்திருக்கும் இப்படத்திற்கு ஜிப்ரான் இசையமைத்திருக்கிறார். பாடல்களை ஜனவரி மாதத்தின் இடையிலும், படத்தை பிப்ரவரி 14 அன்று வெளியிடவும் திட்டமிட்டிருக்கிறாராம் உலகநாயகன்.


## அஞ்சலி இடத்தை நிரப்புவாரா ஸ்ரீதிவ்யா



அங்காடித்தெரு அஞ்சலி நடிக்கத் தெரிந்த நடிகை என்றுதான் பெயரெடுத்தார். ஆனால், காலத்தின் கட்டாயம் அவரும் கவர்ச்சி நடிகை யாக மாறினார். முக்கியமாக சுந்தர்.சி இயக்கிய கலகலப்பு படத்தில் இடுப்பை வளைத்து நொடித்து அஞ்சலி ஆடிய ஆட்டமிருக்கிறதே அயிட்டம் நடிகை களே தோற்றுப்போவார்கள் அப்படியொரு அதிரடியான ஆட்டம். ஆக, ஒரே படத்தில் நடிப்பு புயல் அஞ்சலி கவர்ச்சி புயலாக உருவெடுத்தார். இப்போது ஆந்திராவிலும் அதே பாண யில் சூறாவளியாய் சுழன்றடித்துக் கொண்டிருக்கிறார் அஞ்சலி. ஆனபோதும், தமிழில் தயாராகும் கலகலப்பு-2 படத்தில் நடிக்க அவரை அழைத்தபோது, இப்போதைக்கு தமிழுக்கு வருவதாக இல்லை என்று கையை விரித்து விட்டாராம். இதற்கு முக்கிய காரணம், இங்கு வந்தால் ஏகப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு அவர் பதிலளிக்க வேண்டியதிருக்கும். அதோடு சித்தியின் சீற்றத்துக்கும் ஆளாக வேண்டியதிருக்கும் என்பது போன்ற உள்விவகாரங்களினால்தான் பிஸி என்ற வார்த்தை பயன்படுத்தியுள்ளாராம் அஞ்சலி.

அதனால் இப்போது அவர் இடத்தை நிரப்ப வருத்தப்படாத வாலிபர் சங்கம் ஸ்ரீதிவ்யாவை புக் பண்ணியிருக்கிறார்களாம்.


## இந்தி படத்தில் அரவிந்தசாமி



மணிரத்னத்திடம் அறிமுகமான, அரவிந்தசாமி, பம்பாய் உள்ளிட்ட பல படங்களில் நடித்து, இளம் பெண்களின் கனவுநாயகனாக வலம் வந்தார். ஒரு கட்டத்தில் பட வாய்ப்புகள் குறைந்ததால், சினிமாவை விட்டு வெளியேறிய அவரை கிட்டத்தட்ட, 10 ஆண்டுகளுக்கு பிறகு, மீண்டும் அதேமணிரத்னமே தனது கடல் படத்தில் நடிக்க வைத்தார்.

இதையடுத்து, எந்த தமிழ் படத்திலும் நடிக்காத அவர், இந்திப்பட இயக்குனர் மகேஷ்மஞ்சரேகர் இயக்கும், புதிய படத்தில் நடிக்கிறாராம். கடல் படத்தில் பாதிரியாராக நடித்த அரவிந்தசாமி, இந்தி படத்திலும் ஒரு அழுத்தமான கதாபாத்திரத்தில் நடிக்கிறாராம்.இந்த படம் தமிழ் - இந்தி என, இரு மொழி களில் தயாராகிறதாம்.

## பெயர் குழப்பத்தில் சசிகுமார்



இதுவரை, ஹீரோவுக்கு, இணை யான வேடத்திலும், ஹீரோவாகவும் நடித்து பழக்கப்பட்ட சசி குமார், முதல் முறை யாக, தான் தயாரிக்கும் ஒரு படத்தில், ஒரே ஒரு காட்சியில் மட்டும், சிறப்பு தோற்றத்தில் நடிக்கிறாராம். பாலு மகேந்திரா நீண்ட இடைவெளிக்கு பின் நடிக்கும் தலைமுறைகள் படத்தை, சசி குமார் தான் தயாரிக்கிறார். இதில் சசி குமார் முக்கிய வேடத்தில் நடிப்பதாக முன்பு தகவல் வெளியானது.

ஆனால் முக்கிய வேடத்தில் நடிப்பவர், இயக்குனர் சசிகுமார் இல்லையாம். பாலுமகேந்திராவின், டிவி சீரிய லில் நடித்த சசிகுமார் தான் அந்த முக்கிய வேடத்தில் நடிக்கிறாராம். இதனால் தான் பெயர் குழப்பம் ஏற்பட்டு விட்டதாக படக்குழு வினர் கூறுகின்றனர்

## மக்களை ஏமாற்றுபவர்களுக்கு உடந்தையாக இருக்கமாட்டேன் - அஜித்



தற்போதைய பல மெகா ஹீரோக்கள் சினிமாவில் நடித்து சம்பாதிப்பதைவிட விளம்பரப் படங்களில் நடித்துதான் பெரிய தொகையை சம்பாதித்து வருகிறார்கள். சிலர் இந்திய அளவி லான பெரிய கம்பெனிகளின் விளம்பர தூதராகவும் மாறி விடுகிறார்கள். விஜய், சூர்யா, விக்ரம், ஆர்யா, கார்த்தி என்று பல கோலிவூட் ஹீரோக்கள் இதில் முதலிடம் வகிக்கிறார்கள். அதே போல் பல முன்னணி நடிகைகளும் இப்படித்தான் சம்பாதிக்கிறார்கள்.

ஆனால், அஜீத் மட்டும் எந்தவொரு விளம்பர படங்களிலும் நடிப்பதில்லை என்ற கொள்கையை சினிமாவில் நடிக்க வந்ததில் இருந்தே கடைபிடித்து வருகிறார்.

என்ன காரணம் என்று அவரைக்கேட்டால், ஒவ்வொரு விளம்பர படத்திலும் ஒரு குறிப்பிட்ட பொருள்களின் தரத்தை சொல்லித்தான் நடிக்க வேண்டியுள்ளது. அப்படி நடிகர்கள் பொருட்களின் தரத்தை சொல்லி நடிப்பதால் அதை மக்கள் விரும்பி வாங்குகிறார்கள். இதனால் சம்பந்தப்பட்ட நிறுவனத்துக்கு பெரிய இலாபம் கிடைக்கிறது. ஆனால், அப்படி தரமான பொருள் என்று சொல்லி நடிகர்கள் நடிக்கிற பெரும்பாலான பொருட்கள் தரமற்றவைகளாகத்தான் உள்ளன. இதனால் நடிகர்கள் செய்யும் விளம்பரத்தை நம்பி அந்த தரமற்ற பொருளை வாங்கும் இரசிகர்கள் ஏமாற்றப்படுகிறார்கள்.


இந்த விசயத்தில் மற்றவர்களுக்கு கவலை இருக்கிறதோ இல்லையோ எனக்கு இருக்கிறது. நான் விளம்பரம் செய்கிற பொருள் ஒருவேளை தரமற்றதாக இருந்தால் நானும், மக்கள் ஏமாந்து போவதற்கு காரண மாகி விடுவேன். அதில் எனக்கு உடன்பாடில்லை. மக்களை ஏமாற்றுபவர்களுக்கு நான் ஒருபோதும் உடந்தையாக இருக்க மாட்டேன் என்று அடித்து சொல்கிறார் அஜீத்.

## உடல் பருமனால் வருத்தப்படும் காஜல்




கிட்டத்தட்ட அனுஷ்காவை போன்று நல்ல உயரமானவர் தான் காஜல்அகர்வால். ஆனால் அவரை விட ஸ்லிம்மாக உடலைப் பராமரித்து வருகிறார். அதனால்தான் தன்னை விட உயரம் குறைவான ஹீரோக்களுடன் நடிக்கும்போதும் மேட்சாக தெரிவார். இதனால் எந்தவொரு ஹீரோவும் காஜலை தவிர்க்க மாட்டார்கள்.

அப்படிப்பட்ட காஜல் உடல்தான் ஸ்லிம்மாக உள்ளதே என்று கடந்த சில மாதங்களாக உணவுக்கட்டுப்பாட்டை தளர்த்தி விட்டாராம். அதன்காரணமாக, ஜில்லாவில் அவர் பருமனாகத் தோற்றமளிக்கிறாராம். ஒல்லிக்குச்சி காஜலை பார்த்து பார்த்து போரடித்துவிட்ட இரசிகர்கள் சற்று பருமனான காஜலையும் இரசித்து விடுப்போகட்டுமே என்று படக்குழுவினர் நினைக்கிறார்களாம். ஆனால், காஜல் கவலைப்படுகிறாராம்.



# கவிதைப் பூங்கா



## அகதிகள்

யுத்தம் நடந்த போதும் அகதிகள்
யுத்தம் முடிந்த பின்னும் அகதிகள்
தமிழன் என்பதால் அகதிகள்
எத்தனை நாட்கள்
அல்லது வருடங்கள் நாங்கள்
அகதிகள்
புலத்திலும் அகதிகள்
தாயகத்திலும் அகதிகள்
இதற்கு முடிவு யார் கையில்

வே.தவச்செல்வம்
தும்பளை



## வார்த்தைகளில்

உதடுகள் திறக்கப்படாமல்
மௌனமாய்
உன்னைத் தீர்த்துக்கட்டுகிறது
எங்கள்
வார்த்தைப் பிரளயங்கள்
இயலுமெனில்
எதிர்த்துப்பார்

கவிஞர்.த பருத்திதாசன்



## ஏன் இந்தக் காதல்

சொன்ன வார்த்தைகள் தேனாக இனித்ததடி
அந்த வார்த்தைகள் இன்று உப்பாகக் கசக்குதடி
நீ தந்த காதல் கவிதைகள் வெறும் கற்பனையடி
அதைப் பார்த்த என் விழிகள் ஊமையானதடி

அம்பு விழிகளால் இதயத்தைத் தைத்தவள் நீயடி
அதிலிருந்து கசிந்த இரத்தத் துளிகள் நீ அறிவாயடி
புலம்புகின்ற உன் உதட்டில் நீ குடியிருந்தது போதுமடி
இனி அருந்தப் போகிறேன் மதுவடி

போதுமடி நீதந்த அன்பு
வேண்டாமடி ஊரார் வம்பு
பழகியது வேஷமடி – இனி
நான் வளர்ப்பது தாடியடி

பிரிவைத் தந்தவளே ஏன் இந்தக் காதலடி
தலைசுற்றுவதால் ஒன்றும் புரியவில்லையடி
ஒவ்வொரு கணப்பொழுதும் என் மேனியில்
ஊருதடி காதல் என்னும் விஷப்பூச்சிகள்

வீ.அருள்ராஜா
வவுனிக்குளம்



## ஆராய்ச்சி

உன்
இதய மண்டலத்தில்
யார் இருக்கிறார் என்று
வந்து
ஆராய்ச்சி செய்துகொண்டிருந்த
என் கவிதைகள்
அழுதபடி திரும்பின
அங்கே நான்
இல்லை என்று

உயிரோவியன்



## இதயம்

களவுபோனது பற்றி
கவலைப் படவில்லை
ஆனால்
திருடிப் போனதை மட்டும்
திருப்பிக் தந்துவிடாதே.

கு.தவசீலன்
பளை

## காதல்

உன்னைப் பார்த்த முதல்
என் இதயம் சொன்னது
இவன் தான்
என்னவன் என்று

சாருலதா
திருகோணமலை



## துரோகி

துளிர் விடும் பூவாய் உன்னை
தினமும் நினைத்திருந்தேன்
தனியாய் இருந்தும் உன்னோடு வாழ்வேன்
நிமிடங்கள் தோறும் இசைமீட்டுவேன்
உன் இமைச் சிணுங்கலில் தோற்றுப் போவேன்
தாரம் என்றே உன்னை நினைத்திருந்தேன் – ஆனால் நீ
தனியாய் விட்டுச் சென்றதும்
தெரிந்து கொண்டேன் – நீ செய்ததெல்லாம்
வெறும் வேசம் என்று

சு.தேவகுமார்
முதலியார்குளம்






## காதல்

உன்னுடைய மடல்களை
வாசிக்காதவரை
நான் உணர்ந்ததில்லை
என்னுடைய காதல்
இத்தனை அழகாய்
இருக்குமென்று

இ. தர்சன்
வவுனியா



# புனைகதைப் புயல்



சென்றவாரத் தொடர்ச்சி...

அம்மா அதை மட்டும் கேக்காதேங்கோ. ஏன் பிள்ளை.

மாமியாக்கள் இல்லையெண்டா நீங்க என்னை காணவே மாட்டியள். இயக்கத்தில கொண்டுபோய் சேத்திருப்பாங்கள். படம்கூட இருந்திருக்காது. அப்ப காப்பாத்தி விட்டதுகளை எப்பிடி விட்டுட்டு வாறது. அதோட, மாமி இவரப்பற்றி கவலைப்பட்டிட்டு இருக்கிறா, இப்ப நான் நிக்கிறதால பிள்ளையோட பொழுதுபோடும். அவையள விட்டுட்டு வா எண்டுமட்டும் கேக்காதேங்கோ.

அவளது பதில் அர்த்தமுள்ளதாக இருந்தது.

சரி பிள்ள நான் கேக்கேல்லை உனக்கு பிடிச்சபடி செய். நான் கேட்ட எண்டு மாமியாக்களுக்கு சொல்லிப்போடாத... ஏதும் நினைப்பினம்.

ஒரு நூறு பேர்வரை எதிர்பார்த்தார்கள். அதற்கு ஏற்ப பலகாரங்கள், தேனீருக்கு தேவையான பொருட்கள் எல்லாம் குறையில்லாமல் வாங்கி வைத்தான். கடை என்பதால் எல்லாப் பொருட்களும் தாராளமாக இருந்தன. அவளின் தகப்பன் பிள்ளைக்கு சங்கிலி வாங்கிக்கொடுத்தார். ரவியின் தாய் காப்பும், தோடும் வாங்கினார்.

மாதம் மாதம் 'ராம்' வதனாவிடம் குறைந்தது ஐயாயிரம் ருபா கொடுத்து அவள்

**தொடர் – 34**

பெயரில் வங்கியில் போட்ச் செய்வான். அதைவிட மாமியாரும், மருமகளும் ஒவ்வொரு இலட்சம்ருபா

அம்மா அவசரப்படுத்தினாள். கட்டறண்டா எங்கவைச்சுக்கட்டுறது.

வீடு வசதியில்லை கொட்டிலுக்குள் தம்பிமாரும் நண்பர்களும் பொருட்கள் எடுக்க என அடிக்கடி வந்து போய் கொண்டிருந்ததால் அங்கு வைத்து சாறிகட்டமுடியாததால் தான் கட்டாமல் இருந்தாள். உதுக்கு தான் நான் வெள்ளன வெளிக்கிட்டனான். சாறிய கட்டிக்கொண்டு வேலை செய்ய ஏலுமே.

ஏற்கனவே அவளுக்கு சாறிகட்டத் தெரியாது. ஏ.எல் படிக்கும் போது கட்டியபின், எண்ணி ஒரு ஐந்தாறு தடவைதான் கட்டியிருப்பாள். அதுவும் மாமியாரின் உதவியுடன் தான். திருமணத்துக்கு கூட 'சேலை'கட்டவிலை. சேலை கட்டுவதென்றால்

கடைய பூட்டுறன் அதுக்குள்ள வெளிக்கிடலாம் தானே. இம்..... என்று தலையாட்டியவள், பிள்ளைய தந்திட்டு பூட்டிட்டு வாங்கோ....

பிள்ளையை வாங்கியவள், சாறிகட்டினா பால் குடுக்க கஸ்ரம் குடுத்திட்டு கட்டுறன். தாயிடம் கூறிவிட்டு குழந்தையை வீட்டுக்கொட்டிலுக்குள் கொண்டு போனாள். ராம் கடையை பூட்டி விட்டு வந்தான். வதனா குழந்தைக்கு பால் குடுத்துக்கொண்டிருந்தாள். ராமைக் கண்டதும் 'தமிழ்' அவனிடம் தாவினாள்.

நீங்க சாறி'கட்டேட்டு வாங்கோ. தர்சாவ வரச்சொல்லுங்கோ. கடேக்க போறன். உடுப்பு பாக்கோடு கடைக்குள் போனாள். கடைக்குள் பொருட்கள் அடுக்கப்பட்ட அலுமாரிகளுக்கு

# முள்ளிடை முகிழ்த்த மலர்

அன்னக்கிளி

ஓமம்மா நீங்க வேணுமண்டா ஒவ்வொரு நாளும் வாங்கோ. பிள்ளைய கூட்டிட்டுப் போங்கோ.

ஓம்பிள்ளை.., நான் போட்டு வரட்டே? பாண் கேட்டியள் எடுத்து வைச்சிருக்கிறன் கொண்டு போங்கோ.

வீட்டுக்கு வரும்படி கேட்டதற்கே இத்தனை விளக்கம் தந்து மறுப்பவளிடம் மறுமணம்பற்றி கதைத்திருந்தால் பெரும் பூகம்பமே நடந்திருக்கும் என நினைத்தபடி விடைபெற்றுச் சென்றார். ஆயினும் அவர் மனதில் மறுமணம்பற்றிய சிந்தனை ஆழமாக பதிந்திருந்தது.

காலம் வேகமாக ஓடியது. தமிழ்நிலாவுக்கு முதலாவது பிறந்தநினமும் வந்தது. வதனா அது பற்றி எதுவுமே சிந்திக்கவில்லை. மாமன்மார் அதனை ஆடம்பரமாக செய்ய ஆசைப்பட்டார்கள். தம் வீட்டில் செய்ய திட்டமிட்டபோது தாய் அவளிருக்குமிடத்தில் செய்ய வேண்டும் 'என்று கட்டாயப்படுத்தினார். அவளிடம் கேட்டு ஏற்பாடுகளைச் செய்தனர். வீடு வசதியில்லாததால் தகர கொட்டகை போட்டு 'காட்' அடித்து உறவுகளுக்கு சொல்லி செய்யவேண்டும் என ஆசைப்பட்டனர். ஆயினும் அவள் அதனை மறுத்தாள்.

சாதாரணமாக பந்தல் போட்டு அயல் வீடுகளுக்கு மட்டும் சொல்லி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மாமன்மார் தங்கள் வகுப்பு பிள்ளைகளுக்கு சொல்லப்போவதாக கூறியிருந்தனர். 'கேக்'அருகில் உள்ள பேக்கரியில் அடிக்கக் குடுத்தான். பலகாரங்கள் சுட தேவையான பொருட்களை தாராளமாக வேண்டி வைத்தான். அண்ணன் இல்லாத குறை தெரியாமல் இருக்கவேண்டும் என தாராளம்மாக செலவு செய்தான். உடுப்பு எடுப்பதற்கு வதனாவையும் தாயையும் ஆட்டோபிடித்து அனுப்பினான். தாய் தான் உடுப்பு எடுப்பதாக கூறிய போதும் அவளின் கையில் பத்தாயிரம் ருபா கொடுத்தனுப்பினான்.

வீட்டில் அனைவருக்கும் உடுப்பு எடுத்ததுடன் தனக்குரிய 'சாறி'ச்சட்டையை தைக்கவும் கொடுத்துவிட்டு வந்தாள். ரவிக்குமாருக்கு பிடித்த இளம் பச்சைக்கலரில் சாறி எடுத்ததுடன் சேட்டும் எடுத்தாள். தகரக்கொட்டகை போடலாம் என்று பல இடத்திலும் தேடியும் கிடைக்கவில்லை. கடைசியில் தடிகளால் தரப்பாள் கொட்டில் போட்டு சாரிகளால் அலங்காரம் செய்யலாம் என வதனாவின் மூத்த் தம்பியாரும் நண்பர்களும் ஏற்பாடுகளை செய்தனர்.

கடைக்கு கடந்தமாதம் தான் 'சோளர்' வாங்கியிருந்தான். அதனால் 'லைட்' பிரச்சினையிருக்கவில்லை. படம் பிடிப்பதற்கு ராமின் நண்பன் அண்மையில்தான் புதிதாக 'கமரா' வாங்கியிருந்தான், அவன் முன்பு பெரிய புகைப்படக்கலையகமொன்றில் வேலை செய்தவன். அத்துடன் புகைப்படப்பிரிவிலும் சில காலம் இருந்தவன். அவனிடமே படப்பிடிப்புக்காக கூறியிருந்தான்.

அவள் வீட்டின் அயலவர்களுக்கும் இங்கு அயல் என்று சிலருக்கும் கூறினாள். எல்லாமாக

சீட்டு கட்டுகின்றனர். அதைவிட கடையின் வரவு செலவெல்லாம் வதனாவின் பொறுப்புத்தான். காசு தேவை என்றால் அவளிடம் தான் கேட்டு வாங்குவான். சில வேளைகளில் வியாபார நடவடிக்கைகளையும் அவளின் ஆலோசனைப்படியே செய்வான். அது வெற்றியடையும். அவளது ராசி அப்படி. சிறிது காலத்தில் இவ்வளவு பெரிய கடையாக வளர அவளது திட்டமிடலே காரணம். இன்று அப்பிரதேசத்திலேயே 'மலர் சொப்' என்ற வகையில் திகழ்கின்றது. அண்மையில்தான் 'தமிழ்நிலா மலர் சொப்' பெயர்ப்பலகை மாட்டியதுடன், பில் புத்தகமும் அடித்தான். இந்தவிடயத்தில் மட்டும் தான் அவளின் கருத்தை அவன் ஏற்கவில்லை. அவள் 'ராம் மலர் சொப்' என பெயர் வைக்கும் படி அவள் கூறியபோதும் அவன் ஏற்கவில்லை. ஆயினும் அவனின் முடிவையும் அவள் எதிர்க்கவில்லை.

வதனாவிடம் காசு இருந்தாலும் பிறந்தநாள் செலவுகளை ராமிடம் கேட்டே செய்தாள். எல்லா ஏற்பாடுகளும் சிறப்பாக செய்யப்பட்டன. அன்று காலையிலேயே அவளின் தம்பியாரும் நண்பர்களும் பந்தல் போட்டு சோடித்தார்கள். அவர்களுக்கு மதியச்சாப்பாட்டையும் ஏற்பாடு செய்தார்கள். வீடே கலகலப்பாக இருந்தது. காலையிலிருந்தே கடையில் குழந்தை புதிய சட்டையுடன் அமர்ந்திருந்து எல்லோருக்கும் 'ரொபி' கொடுத்துக்கொண்டிருந்தாள். தாய் எடுத்த சட்டையை விட மாமன்மார், அத்தை, அப்பப்பா என பலரும் விதவிதமான சட்டைகளை எடுத்து கொடுத்திருந்தனர். அதிலும் ராம் தனக்கு பிடித்த 'ரோஸ் கலர்' சூட்டொன்றை எடுத்திருந்தான். அதையே அவள் விரும்பி காலையிலிருந்து அணிந்திருந்தாள்.

நேரம் மூன்றுமணியை தாண்டியிருந்தது. குழந்தைக்கு கால்முகம் கழுவி அலங்காரம் செய்தாள். மாமி, மாமா, மச்சாள். தன் தம்பிமாருக்குரிய சேட்டுக்களையும் எடுத்துக்கொடுத்து கெதியாய் வெளிக்கிடுமாறு கூறினாள். ராமையும் வெளிக்கிடுமாறு கூறினாள்.

ராம் கால்முகம் கழுவிவிட்டு வந்து நல்ல 'ஜீன்ஸ்' அணிந்து அண்மையில் எடுத்த நல்ல சேட்டொன்றையும் அணிந்து கொண்டான். எல்லோரும் வெளிக்கிட்ட பின்னும் அவள் வெளிக்கிடவில்லை என தாய் பேசினாள். மாமன்மார் நண்பர்களுடன் சேர்ந்து கேக் வைக்கும் மேசையை அலங்கரித்துக் கொண்டிருந்தார்கள். 'ஐசிங்' செய்யவில்லை. ஆனால் 'றெஜி போமில்' 'ஐசிங்'கை மாதிரியே அழகாக செய்தார்கள். நண்பர்களில் ஒருவன் நன்றாக சித்திரம் வரையக் கூடியவன். அவன் பின்னணியில் அழகிய முறையில் பெயரை வர்ணக்கடதாசிகளில் வெட்டி ஒட்டியிருந்தான். அதே போலவே 'கேக்கையும்' செய்திருந்தான். அப்பிள்பழம், பூக்கள் போன்றவற்றால் இதனை செய்தது வியப்பிற்குரியதாக இருந்தது.

வதனா மட்டும் வெளிக்கிடாமல் இருந்தாள். நல்ல புதிய பஞ்சாபிதான், ஆனாலும் சாரி எடுத்து சட்டை தைத்து அயன் செய்தும் எடுத்து விட்டாள். பிள்ளை ஆக்கள் வந்திட்டுதுகள் சாறிய கட்டன்.

எப்படியும் கால்மணித்தியாலமாவது தேவை. வீட்டுக்குள் உடுப்பு மாத்த என அடைக்கப்பட்ட சிறிய பகுதிக்குள் அது சாத்தியமற்றதாக இருந்தது.

அப்ப உப்பிடியே நிக்கப்போறியே. இ.....இல்லை சாறி கட்டத்தான் வேணும்.... கதைத்துக் கொண்டிக்கும்போதே அவ்விடத்துக்கு வந்த ராம் கமரா அரைமணித்தியாலத்தில வந்திடும். எல்லாம் சரிதானே. நீங்க புதுச்சாறி எடுத்தமாதிரிக் கிடக்கு ஏன் கட்டேல்ல.

அது தான் நானும் கேக்கிறன். வீட்டுக்குள்ள ஆக்களாம் அது தான் நிண்டு கட்ட இடமில்லையாம். தாய் முந்திக்கொண்டு பதில் கூறினாள். சற்று யோசித்தவன்,

பின்னால் ஏற்கனவே வெளிக்கிடக்கூடியதாக இடம் ஒதுக்கியிருந்தார்கள். தர்சாவும், இவளும் சேர்ந்து இந்த இடத்தை ஏற்பாடு செய்து வைத்திருந்தனர். தர்சா பாடசாலை சீருடைகளை இங்கேதான். வைத்திருப்பாள். அவ்விடத்தில் சிறிய மேசை போட்டு அமைதியாக இருந்து படிக்கவும் வீட்டுப்பாடம் செய்யவும் இந்த இடத்தை பயன்படுத்துவாள். புதிதாக வாங்கிய உடுப்பு பாக்கை அப்படியே தூக்கிக் கொண்டு போனவளை... நாலஞ்சுபேரை அனுப்பிறதோ.?

அவள் வருவாள்...

## 07 ஆம் பக்கத் தொடர்ச்சி

இதில் முக்கிய விடயம் என்னவெனில், பிரித்தானியா போன்ற சில நாடுகள், அவுஸ்ரேலியாவின் தொல்லையினால், அவர்களை திருப்திப்படுத்துவதற்காகவே இலங்கைக்கு சென்றிருந்தாலும், எதிர்பார்த்ததற்கு மேலான பாரிய வெற்றியை மக்கள் பெற்றுள்ளார்கள். ஆகையால், ஐ. நா. மனித உரிமை சபையில் நடந்தது போன்று, பொதுநாலவாய அமைப்பில் இலங்கையினால் மிக நீண்ட காலத்திற்கு சவாரி செய்ய முடியாது. ஆகக் கூடியது இன்னும் இரண்டு மூன்று வருடங்களில், பொதுநலவாய அமைப்பிலிருந்து இலங்கை, நிச்சயம் நீக்கப்படும் காலம் உருவாகும்.

அன்று தான் சுயநலவாயத்தில் ஆசை கொண்ட திரு கமலேஸ்சர்மாவும், அவுஸ்ரேலியாவும் வெட்கத்திற்கு ஆளாக்கப்படுவார்கள். விசேடமாக இவரது பதவி கலத்தில் ஏன் இதை செய்யவில்லை என்ற கேள்விக்கு பதில் கூறவேண்டிய நிலைக்கு கமலேஸ் சர்மா தள்ளப்படுவார். ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் திரு பான் கீ மூனினால் இலங்கை மீது மேற்கொள்ளவிருந்த நடவடிக்கைகளை, அவரது காரியாலயத்தில் அன்று கடமையாற்றிய திரு விஜேநம்பியார் தடுத்து நிறுத்தியது போன்று, இன்று பொதுநலவாய அமைப்பின் நடவடிக்கைகளை, இதனது செயலாளர் நாயகம் கமலேஸ் சர்மா தடுத்து நிறுத்தியுள்ளார்.

இலங்கை விடயத்தில், தனது நாடான இந்தியா ஐ. நா. மனித உரிமை சபையில் எப்படியாக நடந்து கொண்டது என்பதை இவர் தெரியாதவராக இருக்க முடியாது. திரு கமலேஸ் சர்மா, இந்தியாவினுடைய முன்னாள் இராஜதந்திரி என்பதை நாம் யாவரும் அறிவோம். இவர் இராஜதந்திரியாக கடமையாற்றிய வேளையில், இலங்கையின் விடயத்தில் இந்தியாவின் கொள்கை வேறாக இருந்தது என்பதை யாரும் மறுக்கவில்லை. இன்று உலகமே வியத்து தாம் பெரிய தவறை இழத்து விட்டோமே என வருத்தப்படுகின்ற நேரத்தில், கமலேஸ் சர்மா, இலங்கையின் எலும்புக் கூடுகளை, திரு வங்கியின் கம்பளத்திற்கு கீழ், மறைக்க முயற்சிப்பது எந்தவிதத்திலும் நியாயமானதாக தெரியவில்லை.

மிக கவலை என்னவெனில், இவ்வளவு நடந்தேறியும், இன்றும் திரு கமலேஸ் சர்மா போன்ற பல முக்கியஸ்தர்கள், விசேடமாக இந்தியாவின் முக்கியஸ்தர் சிலர், இலங்கையின் ஜனாதிபதி ராஜபக்ஷவினது இரட்டை நாக்கு, இரட்டை வேட செயல்பாடுகளை உணர முடியாது உள்ளனர். இவர்கள் இவற்றை உணரும் சந்தர்ப்பத்தில், சீனாவும் பாகிஸ்தானும் இலங்கை வழியாக, இந்தியா மண்ணில் கால் ஊன்றி விடுவார்கள். கமலேஸ் சர்மாவிற்கு ஒன்றை மட்டும் கூற விரும்புகிறேன். முன்பு போல் அல்லாது, இன்று விடேசமாக ஆசியா நாடுகளில், முக்கிய பதவிகளை வகித்த சிவில், இராணுவ உத்தியோகத்தர்கள், தமது சேவை காலம் முடிந்ததும், தமது அனுபவங்கள் கடினமான வேலைகள் பற்றிய கட்டுரைகளை, புத்தகங்களை எழுதி வெளியிடுகின்றனர்.

இதன் அடிப்படையில், என்றோ ஒரு நாள், இலங்கையின் சிவில் உத்தியோகத்தர் ஒருவர், தமது காலத்தில், பல எதிர்ப்பிற்குள் மத்தியில் தாம் எப்படியாக பொதுநலவாயத்தின் கூட்டத்தை இலங்கையின் நடத்தி முடித்தோம் என்ற உண்மையை எழுத முன்வந்தார்களானால், அன்று தான் பொதுநலவாய அமைப்பின் முக்கிய பாத்திரத்தை வாகிக்கும் பிரித்தானியாவின் எலிசபெத் மகாராணியும், மற்றைய பொதுநலவாய அமைப்பின் அங்கத்துவ நாடுகளும், தலைகுனிய வேண்டிய நிலை ஏற்படும்.

இறுதியாக, உங்களது பொதுநலவாய அமைப்பின் செயலகத்திற்கு, சில வருடங்களுக்கு முன்பு, பல தடவைகள் விஜயம் செய்து, பலரை சந்தித்து உரையாடியவன் என்ற முறையில், ஒன்றை மட்டும் கூறவிரும்புகிறேன். உங்களுக்கு முன்பு இப் பதவியை வகித்தவர், தனது குறிப்பில் இலங்கை பற்றி தற்செயலாக ஏதும் எழுதி வைத்திருந்தால், தயவு செய்து அவற்றை இன்று தன்னும் வாசித்து அறிந்து கொள்ளவும்.



# ஆன்மீக உலகம்



## தேவனுக்கு ஒரு சிறுவன் வேண்டும்



''இங்கே ஒரு பையன் இருக்கிறான்'' (யோவான் 6-9)

கர்த்தராகிய இயேசுவைச் சுற்றிலும் திரள் கூட்டமான ஜனங்கள் கூடியிருந்தனர். அத்திரள் கூட்டத்தினரைப் போஷி க்க வேண்டிய தேவை எழுந்தபோது அவர்களுக்குக் கொடுப்பதற்கு ஒருவரி டமும் ஒன்றும் இருக்கவில்லை. சீஷ்யர்களும் கூட அச்சூழ்நிலையைச் சந்திக்க ஆயத்தமில்லாதவர்களாயிருந்தனர். ஆனால் அங்கு ஒரு சிறுவன் தன்னிடம் இருந்த அனைத்தையும் தியாகம் செய்ய ஆயத்தமாயிருந்தான். அவன் ஐந்து அப்பமும், இரண்டு மீனும் கொண்டு வந்திருந்தான். அவன் அவற்றைக் கர்த்தராகிய இயேசுவிடம் கொடுத்தான். கர்த்தர் தன்னைப் பயன்படுத்திக் கொள்ளத்தக்க வகையில் இந்தத் தனிச்சிறப்பு வாய்ந்த தியாகம் செய்தவன் ஒரு சிறுவனே.


உலகில் இலட்சக்கணக்கான மக்கள் ஆவிக்குரிய பசியால் வாடி வருந்துகின்றனர். தங்களுக்குள்ள அனைத்தையும் ஒரு தியாகமாக பலியாக கர்த்தருக்கு அர்ப்பணிக்கும் சிறுவர்களையே கர்த்தர் தேடுகிறார்.

ஐந்து அப்பங்கள் என்பது ஒரு மனிதனின் ஐம்புலன்களையும் கொண்ட சரீரத்தையும், இரண்டு மீன்கள் என்பது அவனது ஆவியையும் ஆத்துமாவையும் குறிக்கும். அன்பான வாசகரே! உமது ஆவி, ஆத்துமா, சரீரத்தை யாதொரு நிபந்தனையுமன்றி கர்த்தரின் கரங்களில் அர்ப்பணிக்க நீர் மனமுவந்திருக்கிறீரா? அந்தப் பையன் சுயநலமுள்ளவனாயிருந்து தன்னிடமிருந்த ஆகாரம் முழுவதையும் தானே புசித்திருந்தால் அவனது பசியைக்கூட அது ஆற்றியிருக்காது. ஆனால் அவை எல்லாவற்றையும் கர்த்தராகிய இயேசுவிடம் அவன் கொடுத்தபோது அவனுக்குப் பலவிதங்களில் திருப்தி ஏற்பட்டது. மற்றவர்கள் பின்பற்றத்தக்க மாதிரியாக விளங்கிய அவனது கொடுக்கும் சுபாவத்தின் மூலம் கர்த்தருடைய நாமம் மகிமைப்படுத்தப்பட்டது என்ற மிகப்பெரிய திருப்தி அவனது தியாகமுள்ள சேவையின் பிரதிபலனாக அமைந்தது.

கர்த்தராகிய இயேசு ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் பெற்றுக்கொண்டபோது அவர் அவைகளை ஆசீர்வதித்துப் பிட்டு தமக்கென்று எதையும் எடுத்துக்கொள்ளாமல் சீஷர்களிடம் கொடுத்தார். சீஷர்களும் தங்களுக்கென்று ஒரு சிறு துணிக்கையாகிலும் வைத்துக்கொள்ளாமல் அவற்றைக் கூடியிருந்த ஜனங்களுக்கு பகிர்ந்து கொடுத்தார்கள். எல்லோரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்த பின்பு மீதியை பன்னிரெண்டு கூடைகள் நிறை எடுத்தார்கள்.

அன்பான வாசகரே காத்தராகிய இயேசுவிலும் அவருடைய சீஷ்ரிலும் இருந்த ஆவி நமக்குத்தேவை. இத்தியாகத்தின் ஆவியானது அனைவரும் திரள்கூட்டத்தாரும் சிறுவனும், சீஷர்களும், ஏன் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவும் கூட திருப்தியாகப் போஷிக்கபடபட உதவியாயிருந்தது.

## இந்து மதத்தின் முக்கியமான நன்மைகள்



பிறந்து விட்ட எந்த உயிருக்கும் மரணம் நிச்சயமானது. உடலை விட்டு நீங்கும் உயிர் (ஆத்மா) மீண்டும் மறுபிறப்பு எடுக்கும். இது அவர்கள் முற்பிறப்பிலே செய்த பாவத்தின் காரணமாகவே நிக ழும். எனவே இறந்த பின்னர், எல்லாம் வல்ல இறைவனின் பொற்பாதங்களின் அருகில் இருக்காது மீண்டும் இவ்வுலகில் நாம் எல்லோரும் பிறந்திருக்கும் காரணம் நாம் முற்பிறப்பிலே செய்த பாவங்களே.

இவ்வாறு மீண்டும் பிறக்கையில் நாம் முன் பிறப்பில் செய்த பாவ, புண்ணியங்கள் பிரம்மாவினால் கணக்கில் எடுக்கப்பட்டு எமது அடுத்த பிறப்பு எவ்வாறு இருக்கும் என தீர்மானிக்கப்படுகின்றது. (பணக்காரர் அல்லது ஏழை, ஆரோக்கியமான அல்லது நோய் வாய்ப்படுதல், மிகவும் சமூகத்தின் உயர் அந்தஸ்து அல்லது ஒரு சிறைப் பறவை)

எனவே சிறந்த நோக்கமாக, இந்த வாழ்க்கையில் மேலும் பாவங்களை செய்து கொள்ளாமல், இப் பிறவி முடிவதற்கு முன்னர், கடந்த பிறப்பில் செய்த பாவங்கள் அனைத்தையும் நீக்கி எம்மை மீண்டும் பிரச்சினைகள் நிறைந்த இந்த பூமியில் பிறக்க தேவை இல்லாத வகையில், இறைவனின் திருவடி நிழலில் எப்பொழுதும் இருக்கும் பேரின்பப் பேரருள் செய்யுமாறு கோரியே சிவபெருமானை வழிபடுகிறோம்

2 ஆம் பக்கத் தொடர்ச்சி ...

ஐ.நா. பாதுகாப்பு அவையில் சிரியாவை கண்டிக்கும் தீர்மானம் கொண்டு வருவதை ரஷ்யாவும், சீனாவும் தடுத்த போது 'சிரியாவின் சர்வதேச நண்பர்கள்' என்றொரு கூட்டமைப்பை ஏற்படுத்தி சிரிய அரசுக்கு நெருக்கடியும் சிரியாவின் எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவும் வழங்கியது அமெரிக்கா. அது போல ஈரானின் அணுத் திட்டங்களை காரணம் காட்டி அதன் மீது பொருளாதாரத் தடைகளை ரஷ்யா மற்றும் சீனாவின் ஆதரவு இல்லாமலே கொண்டுவர துணிந்தது அமெரிக்கா.

இப்படி உலகலாவிய ரீதியில் தான் வல்லரசாகுவதை விரும்பும் அமெரிக்கா இலங்கையில் விடுதலைப்புலிகளை தொடர்ந்தும் வளரவிடுவதானது எதிர்காலத்தில் தனக்கே பெரும் சவாலாக அமையும் என்று எண்ணியே அவர்களை அழிப்பதில் தீவிரம் காட்டியது.

அத்துடன் ஒசாமா பின்லேடன் போல உலக நாடுகளுக்கு பயங்கரவாத தாக்குதல் தலையிடியை விடுதலைப்புலிகள் ஏற்படுத்தமாட்டார்கள் என்று தெரிந்திருந்தாலும்கூட பொருளாதார ரீதியில் இலங்கை அமெரிக்காவுக்குத் தேவை என்பதும், விடுதலைப்புலிகள் இலங்கையில் இருக்கும் வரையில் பொருளாதார ரீதியாக தனது விருப்பப்படி இலங்கையைப் பயன்படுத்த முடியாது என்றும் கருதியே விடுதலைப்புலிகளை அழிப்பதில் தீவிரம் காட்டியது.

ஏனெனில் 2011 இல் அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஒபாமா, **"ஆசிய-பசிபிக் பிராந்தியத்தை நெறிப்படுத்தவும், அதன் எதிர்காலத்தை வடிவமைக்கவும் அமெரிக்காவுக்கு பெரிய, நீண்டகால திட்டம் உள்ளதாக"** தெரிவித்திருந்தார். அதைவிட அமெரிக்க அரசுச் செயலாளர் ஹிலாரி கிளிண்டன் 2011இல் 'அமெரிக்காவின் பசிபிக் நூற்றாண்டு' எனும் கட்டுரையில் மிகத் தெளிவாக விளக்குகிறார். **"ஈராக்குடனான போர் முடிவு பெற்ற நிலைமை மற்றும் ஆப்கானிஸ்தானிலிருந்து படைகளை திரும்பப் பெறத் தொடங்கியுள்ள சூழ்நிலையில் அமெரிக்கா ஒரு முக்கியப் புள்ளியில் நிற்கிறது. ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் அடுத்த பத்தாண்டுகளுக்கான அமெரிக்காவின் முக்கியமான ஆட்சிப் பணி வரையறுக்கப்பட்டுள்ளது. பொருளாதாரம், ராஜதந்திரம் மற்றும் போர்த்தந்திரம் சார்ந்த வகைகளில் வலுவான முதலீட்டை அங்கு குவிப்பதாகும். பசிபிக் பெருங்கடலையும், இந்து மகாசமுத்திரத்தையும் கப்பல் போக்குவரவு மற்றும் போர்த்திறம் சார்ந்து இணைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் உலகத் தலைமைக்கு இந்த ஒழுங்கு மிக முக்கியமானது எனவும் இந்தப் பகுதி அந்த நோக்கத்திற்கு மிகவும் இன்றியமையாதது** எனவும் அவர் கருதுகிறார்.

அமெரிக்காவின் இலங்கை மீதான தற்போதைய நிலைப்பாடுகள் கூட எதிர்கால நன்மை கருதியே அமைந்துள்ளன. அதாவது அயல் உறவுகளுக்கான செனட் ஆணையம் 2009லேயே தமிழ் அகதிகள் பிரச்சினை குறித்து இவ்வாறு கருத்துரைத்தது. **"இலங்கை இந்து மகா சமுத்திரத்தில் மிக முக்கியமான கடல்சார் வணிகப்பாதையில் ஐரோப்பா, சீனாவின் மத்திய கிழக்கு மற்றும் ஆசியப் பகுதிகளை இணைக்கும் புள்ளியில் அமைந்துள்ளது. அமெரிக்காவால் இலங்கையை நிச்சயமாக இழக்க முடியாது."** என்கிறது அந்த அறிக்கையின் வாசகங்கள்.

ஒட்டுமொத்தத்தில் அமெரிக்காவின் இச்செயற்பாட்டுக்கு பிரதான காரணங்களாக ஒன்று அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் அபிவிருத்தியை தடுத்து நிறுத்தும் நோக்கம், உலகப்போர் ஆரம்பிக்குமேயானால் இலங்கைத்தீவில் தனது ஆயுதக் கப்பல்களை நிறுத்திக் கொள்ள இலங்கையரசின் தளங்கள் தேவை என்பதும், விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் உலகளாவிய ரீதியில் விரிவுபடுத்தப்படுமாகவிருந்தால் இறுதியில் இது தனக்கே ஆபத்தாக அமையும் என்று கருதியமையும், இந்தியாவின் இலங்கைமீதான கரிசனையைவிட தனது நாடே அதிக கரிசனை கொண்டிருக்கிறது என்பதை உலக நாடுகளுக்கு எடுத்துக்காட்டவும் அமெரிக்காவின் துணிச்சல் மிக்க இச்செயற்பாடு அமைந்துள்ளது.

## பணமிருந்தாலும் பணிவு வேண்டும்



* நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையைக் கைவிடுங்கள். எந்த பிரச்சினையையும் நாசூக்காக கையாளுங்கள். நீங்கள் சொன்னதே சரி, செய்வதே சரி என்று பிடிவாதம் பிடிக்காதீர்கள்.

* உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல், இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும், அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் கைவிடுங்கள்.

* கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் உணர்ச்சி வசப்பட்டு நம்பி விடாதீர்கள். அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தி ஆர்ப்பாட்டம் செய்யாதீர்கள்.


* மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்துக் கர்வப்படாதீர்கள். எதையும் தேவைக்கு அதிகமாய் எதிர்பார்க்காதீர்கள். அர்த்தமில்லாமலும், தேவையில்லாமலும், பின்விளைவு அறியாமலும் பேசிக்கொண்டே இருப்பதைக் கைவிடுங்கள்.

* பணம், பதவி உங்களிடம் இருந்தாலும் பணிவோடு நடந்து கொள்ளுங்கள். (அவ்வாறு செய்தால்) இன்னும் பெரிய பதவிகள் உங்களைத் தேடி வரும். பிரசசினை வரும் போது, அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல், நீங்களே பேச்சைத் தொடக்க முன்வாருங்கள்.


* புன்முறுவல் காட்டவும், சின்னச்சின்ன அன்புச்சொற்களைக் கூறவும், நன்றி சொல்லவும் மறந்து விடாதீர்கள்.

* நா நேர்மையாக இருக்குமானால் ஒருவனுடைய இதயம் நேர்மையான வழியில் செல்லும். நா நேர்மையற்றதாக இருக்குமானால் இதயம் நேர்மையான வழியில் செல்ல முடியாது.

* மனதை அடக்கியாண்டு மறுமைக்கும் பயன்படும் பணிகளைச் செய்பவனே அறிவாளி. மனம்போன போக்கில் நடந்து கொண்டு இறைவன் அருளை எதிர்பார்ப்பவன் முட்டாள்.



# அறிவியல் உலகம்



## BMW i5 காரினை வடிவமைக்கும் பணிகள் மும்முரம்




BMW தொடரில் விற்பனைக்கு வரும் கார்கள் மக்கள் மத்தியில் மிகப்பிரம்மாண்டமான வரவேற்பினைப் பெற்றுவருகின்றது.

இந்நிலையில் BMW i3 காரானது அடுத்த வருட ஆரம்பத்திலும், BMW i8 காரானது அடுத்த வருடத்தின் பிந்திய மாதங்களிலும் சந்தைக்கு வரவுள்ளது. இதேவேளை BMW i5 எனும் புதிய வடிவமைப்புடனும், இலத்திரனியல் செயற்பாட்டினை அதிகளவில் கொண்டதுமான காரினை வடிவமைக்கும் பணிகள் தற்போது மும்முரமாக இடம்பெறுகின்றன. BMW நிறுவனமானது தற்போது i வரிசையினைக் கொண்ட கார்களை அறிமுகப்படுத்துவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றது.

இதன் காரணமாக i1, i2, i3, i4, i5, i6, i7 மற்றும் i8 ஆகிய வியாபாரக் குறிகளை அடிப்படையாகக் கொண்டு கார்களை அறிமுகப்படுத்திவருகின்றது.

## ஸ்மார்ட் கைப்பேசிகளின் செயற்பாடுகளை காட்டிக்கொடுக்கும் கைப்பட்டி



தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனாக பல்வேறு செயற்பாடுகளை கண்காணிக்கும் முகமாக இலத்திரனியல் கைப்பட்டிகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

இவற்றின் ஒரு அங்கமாக ஸ்மார்ட் கைப்பேசிகளின் செயற்பாடுகளை காட்டிக்கொடுக்கும் Vybe எனும் புதிய கைப்பட்டி ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

50 அடிகள் தூரத்திற்கு செயற்திறன்கொண்ட இதனை iPhone 4S, iPhone 5/5C/5S போன்றவற்றிலும் அன்ரோய்ட், விண்டோஸ் இயங்குதளங்களில் செயற்படும் ஸ்மார்ட் கைப்பேசிகளுக்கும் பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இதன் விலையானது 39 டொலர்கள் ஆகும்.

## குளிர்கால ஆரோக்கியம்



குளிர்காலம் நெருங்கிவிட்டாலே பழங்கள் சாப்பிடுவதை நிறுத்திக்கொள்வது மக்களிடையே பழக்கவழக்கத்தில் உள்ள ஒன்று. ஆனால் குளிர்காலங்களில் விளையக்கூடிய பழங்கள் சந்தைகளில் மலிவான விலையில் கிடைக்கும்.

மேலும் குளிர்காலத்தில் விளையக்கூடிய பழங்கள் அனைத்தும் தற்போது ஏற்படக்கூடிய உடல்நல பிரச்சனைகளை சரிசெய்யும் தன்மைகொண்டவை. இவற்றை சாப்பிடுவதன் மூலம் சளி, இருமல், காய்ச்சல் போன்றவற்றில் இருந்து விலகி இருக்கலாம்.

**அப்பிள்–**

அப்பிள் பழத்தை தினமும் சாப்பிடுவதன் மூலம் உடலில் உள்ள சத்துக்களின் அளவை அதிகரித்துக் கொள்ளலாம். இதில் நார்ச்சத்து மற்றும் ஆன்டி-ஒக்ஸிடண்ட் அதிகம் இருப்பதால், இதனை சாப்பிட காய்ச்சல் மற்றும் சளியில் இருந்து தள்ளி இருக்க முடியும்.

**ஒரேஞ் –**

ஒரேஞ் மற்றும் இதர சிட்ரஸ் பழங்களை தினமும் சலட், ஜூஸ் என்று போட்டு உட்கொண்டு, உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்து, நோய் தொற்றுகளில் இருந்து விலகி இருங்கள். தினமும் ஒரேஞ் பழத்தை சாப்பிட்டு வந்தால் சருமம் பொலிவோடு இருக்கும்.

**மாதுளை–**

உடல் எடையை குறைக்க நினைப்பவர்கள் இந்த பழத்தை சாப்பிடுவது சிறந்தது. ஏனெனில் இது கலோரி குறைவான பழம். உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் வைரஸ் கிருமிகளை மிகத் துரிதமாகவும், அதிக அளவிலும் அழித்து விடுகிறது. இனிப்பு மாதுளம் பழத்தைச் சாப்பிட்டால் இதயத்திற்கும், மூளைக்கும் மிகுதியான சக்தி கிடைக்கிறது. பித்தத்தைப் போக்குகிறது இருமலை நிறுத்துகிறது. புளிப்பு மாதுளையைப் பயன்படுத்தினால் வயிற்றுக் கடுப்பு நீங்குகிறது.


**குருதிநெல்லி–**

குருதிநெல்லி ஒரு பன்முகப்பழம். ஏனெனில் இதனை ஜாம், ஜூஸ், சோஸ், உலர்ந்த நிலையில் என்று பலவாறு சாப்பிடலாம். மேலும் இதில் அன்டி-ஒக்ஸிடண்ட் அதிகம் இருப்பதோடு, இது உடலை குளிர்ச்சியாக வைத்துக் கொள்ளும்.

**ஸ்டரோபெரி –**

ஸ்ட்ரோபெரி பழம் உடலில் நோய் ஏதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவும். இது சர்க்கரை நோய், புற்று நோயை தடுக்கும் திறன் வாய்ந்தது. இதுதவிர எல்லாவிதமான நோய்களையும் தடுக்கும். ஸ்டரோபெரி பழத்தில் உள்ள பிலேவனாய்டு என்ற பொருள், நோய் எதிர்ப்பு சக்தி மருந்துக்கு இணையாக செயல்படுகிறது.

## பயணங்களின் போது ஸ்மார்ட் கைப்பேசிகளை சார்ஜ் செய்ய நவீன சார்ஜர் அறிமுகம்




கார்களின் பயணிக்கும்போது ஸ்மார்ட் கைப்பேசிகளை இலகுவாக சார்ஜ் செய்துகொள்ளும் வகையில் நவீன சார்ஜர் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

R2-D2 எனும் இச் சார்ஜர் ஆனது USB இணைப்பானை கொண்டுள்ளதுடன் ஒரே நேரத்தில் இரு சாதனங்களை சார்ஜ் செய்துகொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

2.1 அம்பியர் மின்னோட்டத்தினை பிறப்பிக்க வல்ல இச்சாதனத்தின் பெறுமதியானது 49.99 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

## iOS சாதனங்களில் அழிந்த தரவுகளை மீட்பதற்கான மென்பொருள்



கணனிகள் மற்றும் ஏனைய மொபைல் சாதனங்களில் சேமித்து வைக்கப்பட்டுள்ள தரவுகள் அழிந்துபோகுமிடத்து அவற்றினை மீட்டு எடுப்பதற்கு பல்வேறு மென்பொருட்கள் காணப்படுகின்றன.

இவ்வாறு iOS சாதனங்களில் அழிந்து போகும் தர்வுகளை மீட்டு தருவதற்கென Leawo iOS Data Recovery எனும் மென்பொருள் காணப்படுகின்றது.

இதன் மூலலம் இழக்கப்பட்ட வீடியோக்கள், புகைப்படங்கள், குறுஞ்செய்திகள், அழைப்புக்கள் தொடர்பானதகவல்கள்போன்றவற்றினை மீட்டுக்கொள்ள முடியும்.

மேலும் இந்த மென்பொருளானது iPhone 5, iPad 4, iPad mini, iPod touch 5 போன்றவற்றிலும் iOS 6.1 இயங்குதளத்திலும் கொண்ட செயற்படக்கூடியதாக இருக்கின்றது.

## அமேசான் தளத்தின் புதிய தொழிநுட்பம்




ஒன்லைன் மூலமாக பல்வேறு பொருட்களை விற்பனை செய்துவரும் பிரபலமான நிறுவனங்களில் ஒன்றான அமேசான் தற்போது புதிய யுக்தி ஒன்றினை கையாள முற்பட்டுள்ளது.

இதன்படி கொள்வனவு செய்யப்படும் பொருட்களை குறித்த வாடிக்கையாளருக்கு டெலிவரி செய்வதற்காக ஒக்டோ கொப்பர் (Octocopter) எனும் சாதனத்தினை பயன்படுத்தவுள்ளது.

இச்சாதனமானது 8 விசிறிகளைக் கொண்டுள்ளதுடன் 60 நிமிடங்களிற்கு தொடர்ச்சியாக பறக்கக்கூடியது. இதனால் இந்த பறப்பு எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களிலேயே அமேசான் தனது புதிய சேவையை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சந்திரனிலிருந்து பூமிக்கு சூரியஒளி மினாசாரம்



சந்திரனில் இருந்து பூமிக்கு சூரிய ஒளி மின்சாரம் கொண்டு வர ஜப்பான் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது. கடந்த 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் பூகம்பமும், சுனாமியும் ஏற்பட்டதில் புருஷிமா அணுஉலை வெடித்து சிதறியது. அதனால் அங்குள்ள அணுமின் நிலையங்கள் மூடப்பட்டு வருகின்றன.

எனவே, நாட்டின் மின் தேவைக்கு விஞ்ஞானிகள் மாற்று வழியை உருவாக்க முயற்சி செய்கின்றனர். இந்த வகையில் சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிப்பதை தீவிரப்படுத்த உள்ளனர். சந்திரனில் இருந்து பூமிக்கு சூரிய ஒளிமூலம் மின்சாரம் தயாரித்து கொண்டு வர ஜப்பானின் ஷிமிஷு கார்ப்பரேசன் என்ற நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

சந்திரனின் பூமத்திய ரேகை பகுதியை சுற்றிலும் சோலார் பேனல் தகடுகளை சீராக அமைத்து அதன் மூலம் சூரிய ஒளி மின்சாரம் தயாரித்து பூமிக்கு கொண்டு வர திட்டமிட்டுள்ளது. அதற்கு ஜனா ரிங் என பெயரிட்டுள்ளனர்.


இதன் மூலம் 13 ஆயிரம் டெராவாட் மின்சாரத்தை தயாரித்து பூமிக்கு கொண்டு வர முடியும். ஒரு டெராவாட் என்பது 1 இலட்சம் கோடி வாட் ஆகும். இந்த திட்டத்தின் கட்டுமான பணி வருகிற 2035ஆம் ஆண்டில் தொடங்கப்பட உள்ளது.

தொடர்ந்து மின்சாரம் தயாரிக்க சந்திரனின் பூமத்திய ரேகை பகுதியில் 11 ஆயிரம் கி.மீற்றர் பரப்பரளவில் 400 கி.மீற்றர் இடைவெளியில் ஆங்காங்கே சோலார் மின்கலன்கள் அமைக்கப்பட உள்ளன.

சந்திரனில் சோலார் பேனல் தகடுகள் மற்றும் சோலார் மின்கலன்கள் அமைக்கும் பணியில் ரோபோக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

சந்திரனின் பூமத்திய ரேகை பகுதியில் அமைக்கப்படும் சோலார் பேனல் தகடுகள் கேபிள்கள் மூலம் பெறப்படும் மின்சாரம் மைக்ரோவேவ் மற்றும் லேசர் டிரான்ஸ்மிசன் நிலையங்களில் இணைக்கப்படும். பின்னர் அவை 20 கி.மீற்றர் விட்டமுள்ள அன்டனாக்கள் மூலம் பூமிக்கு வரும். தொழிநுட்பத்தின் வளர்ச்சி உலகை ஆட்டிப்படைக்கிறது எனலாம்.

# விளையாட்டு உலகம்



## உலகக்கிண்ண காற்பந்துக்கு மைதானங்கள் இன்னும் தயாராகவில்லை





2014 உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளுக்கான மூன்று விளையாட்டரங்குகளின் நிர்மாணப் பணிகள் நிர்ணயிக்கப்பட்ட காலஎல்லைக்குள் நிறைவடையாது என சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

காலதாமதமடையும் ஷாவ் போலோவிலுள்ள விளையாட்டரங்கின் நிர்மாணப்பணிகளில்ஈடுபட்டிருந்தஇருவர் கடந்த மாதம் உயிரிழந்திருந்தனர்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு அனுதாபத்தை தெரிவித்த சம்மேளனத்தின் தலைவர் செப் பிளாட்டர் முதலாவது போட்டிக்கு விளையாட்டரங்கு தயாராகும் எனவும் சுட்டிக்காட்டினார்.

விளையாட்டரங்குகள் தொடர்பான பிரச்சினை மிகவும் சிறிய ஒன்றெனவும் அது குறித்து கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் இந்த விளையாட்டரங்குகள் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் தயாராகும் என சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் செயலாளர் நாயகம் ஜேரோம் வல்ஹி கூறியுள்ளார்.

## ஐ.சி.சி க்கு புதிய நெருக்கடி




ஐ.சி.சி க்கு அதிக வருமானம் தரும் பி.சி.சி.ஐக்கு கூடுதல் நிதி வழங்க வேண்டும் என பி.சி.சி.ஐ செயலர் சஞ்சய் படேல் தெரிவித்தார்.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் சார்பில் உலகின் பல இடங்களில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதில் கிடைக்கும் வருமானத்தில் 75 சதவீதம் இந்தியா, அவுஸ்திரேலியா போன்ற நிரந்தர உறுப்பு நாடுகளுக்கும், 25 சதவீதம் ஆப்கான், அயர்லாந்து உள்ளிட்ட மற்ற உறுப்பினர்களுக்கு தரப்படும்.

இருப்பினும், இந்திய அணி பங்கேற்கும் போட்டிகள் மூலம் தான், ஐ.சி.சிக்கு 75 சதவீத வருமானம் கிடைக்கிறது. இதனால், இந்தியாவுக்கு இலாபத்தில் அதிக பங்கு தர வேண்டும், இந்திய கிரிக்கெட் போர்டு (பி.சி.சி.ஐ) தலைவர் சீனிவாசன், முதன் முறையாக போர்க்கொடி தூக்கியுள்ளார்.

இவரது கோரிக்கை நிறைவேறும் பட்சத்தில் கடந்த நான்கு ஆண்டுக்கு ரூ. 3102 கோடி வரை இந்தியாவுக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்திய தென்னாபிரிக்க அணிகள் பலப்பரீட்சையில்



இந்திய மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி வியாழக்கிழமை ஜோகன்னர்ஸ்பர்கில் நடைபெறுகிறது. மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பலமான தென்னாபிரிக்காவை அவர்களின் சொந்த மண்ணிலேயே இந்தியா சந்திக்கவுள்ளது.

தென்னாபிரிக்கா அணி டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தில் இருந்தாலும், சர்வதேச ஒரு நாள் அணிகள் தரவரிசை பட்டியலில் அந்த அணி 5வது இடத்தில்தான் உள்ளது. இந்தியா முதல் இடத்தில் உள்ளது. முதல் முறையாக ஒரு இளம் இந்திய அணி, வெளிநாட்டிற்கு சென்று விளையாடவுள்ளனர்.

இந்திய அணியைப் பொருத்த வரை அணியின் துடுப்பாட்டம் மிகப்பெரிய பலம். அணியில் விராத் கோஹ்லி ஷிகர் தவாண் ரோஹித் ஷர்மா ஆகியோர் இந்த ஆண்டில் 1000 ஓட்டங்களுக்கு மேல் குவித்துள்ளனர்.

மத்தியதர வரிசையில் ஆடும் யுவராஜ் சிங் சுரேஷ் ரெய்னா, ரவீந்திர ஜடேஜா ஆகியோரது ஆட்டம் கடந்த சில போட்டிகளில் சரியில்லை என்றாலும், இந்தத் தொடரில் சிறப்பாகச் செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. இவர்களோடு, அணியின் நம்பிக்கை நட்சத்திரமான தோனியும் இருப்பது இந்திய அணிக்கு பலம் சேர்க்கும்.

தென்னாபிரிக்க அணியும் ஹசிம் ஆம்லா, குயின்டன் டி காக், கிரீம் ஸ்மித், அணியின் தலைவர் டிவில்லியர்ஸ், காலிஸ், ஜே.பி.டுமினி, டேவிட் மில்லர் என பேட்டிங்கில் திறமையான வீரர்களைக் கொண்டுள்ளது. அந்த அணியிலும், ஒரு சிலரைத் தவிர, மற்றவர்கள், சமீபத்திய ஆட்டங்களில் சோபிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, இந்த வாய்ப்பை சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள, அனைத்து துடுப்பாட்டக்காரர்களும் முனைப்போடு இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

## ரஞ்சி கோப்பை தொடர் ஆரம்பம்

இந்தியாவின் முன்னணி உள்ளூர் தொடரான ரஞ்சி கோப்பையில் 27 அணிகள் பங்கேற்கின்றன. இவை ஏ, பி, சி என, மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, லீக் முறையில் போட்டிகள் நடக்கின்றன. நாளை தொடங்கும் இதன் பி பிரிவு 6வது லீக் போட்டியில் தமிழக அணி, பரோடாவை எதிர்கொள்கிறது. இதற்கான தமிழக அணி அறிவிக்கப்பட்டது. கேப்டனாக மீண்டும் பாலாஜி நியமிக்கப்பட்டார்.

அணி விவரம்: பாலாஜி(கப்டன்), பத்ரிநாத் (துணை கப்டன்), அபினவ் முகுந்த், தினேஷ் கார்த்திக் (விக்கெட் கீப்பர்), அபராஜித், பிரசன்னா, விஜய் சங்கர், ஸ்ரீனிவாஸ், அருண் கார்த்திக், ரங்கராஜன், இந்திரஜித், முகமது, அஷ்வின் கிறிஸ்ட், கவுசிக், ரஹில் ஷா.

## ஹொக்கிவீரர் தயான்சந்திற்கு பாரதரத்னா விருது



ஹொக்கி விளையாட்டின் மூலம் நாட்டிற்கு ஆற்றிய சேவையை கருத்தில் கொண்டு ஹொக்கி வீரர் தயான்சந்திற்கு பாரத ரத்னா வழங்க மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

சர்வதேச ஒலிம்பிக் சங்கத்திற்கும், இந்திய ஒலிம்பிக் சங்கத்திற்கும் இடையே உள்ள முட்டுக்கட்டையை களைய மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும் இதன் காரணமாக அடுத்த வருடம் நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டியில் இந்திய வீரர்கள் நமது தேசியக் கொடி அணிந்து விளையாடமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ராசியில்லாத 2013 புலம்பும் செய்னா நேவால்



எனக்கு 2013ஆம் ஆண்டு இராசியில்லாததாக அமைந்து விட்டது. அடுத்த ஆண்டில் வெற்றி பெற கவனம் செலுத்துவேன் என செய்னா நேவல் தெரிவித்தார். இந்திய பட்மின்டன் நட்சத்திரம் செய்னா நேவல் 23. கடந்த 2012ஆம் ஆண்டில் ஒலிம்பிக் (லண்டன்) வெண்கலம் வென்ற இவர் உலக தரவரிசையில் நம்பர்-2 இடத்தை பெற்றார்.

ஆனால் இந்த ஆண்டு அப்படியே தலை கீழாகி விட்டது. பங்கேற்ற எந்த தொடரிலும் பைனலுக்கு செல்லவில்லை. மலேசியா ஆல் இங்கிலாந்து தொடர், இந்தோனேசியா, போட்டிகளில் அரையிறுதியை தாண்டவில்லை.

கொரியா, சிங்கப்பூர், டென்மார்க், உலக சாம்பியன்ஷிப் தொடர்களில் காலிறுதியுடன் திரும்பினார். பிரெஞ்ச், சீனா, ஹாங்காங் தவிர, சொந்த மண்ணில் பங்கேற்ற தொடரில் கூட இரண்டாவது சுற்றுடன் நடையை கட்டினார். இதுகுறித்து செய்னா நேவல் கூறியது: காயம் எல்லாம் சரியாகி விட்டது. பல்வேறு தோல்விகளால் தரவரிசையில் 6வது இடத்துக்கு வந்துவிட்டேன். இந்த ஆண்டு நேரம் சரியில்லை போல. அதிர்ஷ்டம் என்பக்கம் இல்லை. இனி அடுத்த ஆண்டு போட்டிகளில் வெற்றி பெற தீவிர கவனம் செலுத்துவேன் என்று தெரிவித்துள்ளார்.

## அவுஸ்திரேலியாவுக்கு பாடம் புகட்ட இங்கிலாந்து தயார்



சொந்த மண்ணில் அபாரமாக விளையாடி வரும் அவுஸ்திரேலிய அணிக்கு ஆஷஸ் 2வது டெஸ்ட் போட்டியில் பாடம் புகட்ட இங்கிலாந்து அணி காத்திருக்கிறது. இரு அணிகளுக்கு இடையிலான 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடர் அவுஸ்திரேலியாவில் நடந்து வருகிறது.

இங்கிலாந்தில் நடந்த கடந்த தொடரில் அடைந்த தோல்விக்கு பழி தீர்க்கும் விதமாக சொந்த மண்ணில் அவுஸ்திரேலியா அணி துடிப்புடன் செயல்படுகிறது. அதற்கேற்ப பிரிஸ்பேன் கபா மைதானத்தில் நடந்த முதல் டெஸ்டில் அவுஸ்திரேலிய அணி 381 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதே உற்சாகத்தில் அடுத்தடுத்த போட்டிகளில் வெற்றிபெற முனைப்பில் அந்த அணி உள்ளது. மிச்செல் ஜோன்சன் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறும் இங்கிலாந்து, அடிலெய்டில் டிசம்பர் 5ஆம் திகதி தொடங்கும் 2ஆவது டெஸ்டில் எழுச்சி பெறக் காத்திருக்கிறது.

இதுகுறித்து இங்கிலாந்தின் துடுப்பாட்ட பயிற்சியாளர் கிரஹாம் கூச் கூறுகையில், வார்த்தைப் போரையும் ஆட்டத்தின் ஒரு அங்கமாகக் கருதி சாதிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். இதற்கிடையில் காயத்தில் இருந்து குணமடைந்த டிம் பிரஸ்னென் அடிலெய்டு டெஸ்டில் களமிறங்க உள்ளார்.

## பாகிஸ்தானுடனான தொடர் இலங்கைக்கு சவால்



ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ள பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டிகள் மிகவும் சவால்மிக்கதாக இருக்கும் என்று இலங்கை கிரிக்கட் அணியின் பிரதம பயிற்றுவிப்பாளர் கிரஹம் போட் இதனை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு ராச்சியத்தை பொறுத்தவரையில் பாகிஸ்தானிய அணி சிறப்பாக ஆட்டத்தை வெளிப்படுத்தக்கூடிய சாத்தியங்கள் உள்ளன.

அத்துடன் கடந்த 6 மாதங்களாக அந்த அணி ஐக்கிய அரபு ராச்சியத்தில் கிரிக்கட் போட்டிகளில் பங்கேற்று வருவதால் அந்த அணிக்கு அங்குள்ள மைதானங்கள் பரிச்சியமாக இருக்கலாம் என்றும் இலங்கை அணியின் பிரதம பயிற்றுவிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு இருபதுக்கு-20 போட்டிகள், ஐந்து சர்வதேச ஒருநாள் போட்டிகள், மூன்று டெஸ்ட் போட்டிகள் இரு அணிகளுக்கும் இடையில் இடம்பெறவுள்ளன.

# உலகச் செய்திகள்

## சீனாவில் எயிட்ஸ்நோய் மற்றும் தொற்றுக்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



மக்கள் தொகையில் உலகின் பெரிய நாடாக விளங்கும் சீனாவில் கடந்த 9 மாதங்களில் மட்டும் சுமார் 70 ஆயிரம் புதியவர்களுக்கு எய்ட்ஸ் தொற்று ஏற்பட்டுள்ளது என்று சீன அரசாங்கம் தெரிவித்துள்ளது. இவர்களையும் சேர்த்து அந்நாட்டின் எய்ட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை 4 இலட்சத்து 34 ஆயிரமாக உயர்ந்துள்ளது.

சீனாவில் உள்ள 31 மாகாணங்களிலும் எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவற்றில் தற்போது 2 இலட்சத்து 9 ஆயிரம் பேர் தொடர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று சீன சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## 80இளம்பெண்களின் மண்டையோடுகள் கண்டுபிடிப்பு



சீனாவில் 4000 ஆண்டுகளுக்கு முன் பலியிடப்பட்ட பெண்களின் மண்டை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சீனாவின் ஷான்ஜி மாகாணத்தில் 4000 ஆண்டுகளுக்கு முன்பு அழிந்து போன ஷிமாவ் நகரத்தை 1976ஆம் ஆண்டு அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர்.

இதனையடுத்து புதைந்து போன இந்நகரத்தை தோண்டும் பணி தொடங்கியது. இந்நிலையில் இந்நகரத்தின் கிழக்கு வாயிலின் முன்பு இரண்டு குழிகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதில் ஒரு குழியில் 24 மண்டை ஓடுகள் வீதம் 48 மண்டை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும் கிழக்கு பகுதி சுவரின் அருகே இருந்த மற்றொரு குழியில் இருந்து, 32 பெண்களின் மண்டை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டன.

இவை பெரும்பாலும் இளம் பெண்களின் மண்டை ஓடுகள் என்று கூறப்படுகிறது. இவர்கள் அனைவரும் அடிமைகளாக இருந்து இருக்கலாம் என்றும், மதச்சடங்கின் படி பலியிடப்பட்டிருக்கலாம் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இதன் மூலம் ஆதிகாலத்தில் வாழ்ந்த மக்களின் மதசிந்தனை, கலாசார பழக்க வழக்கங்கள் மற்றும் கட்டுமான திட்டங்கள் குறித்து மேலும் தெரிந்து கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளனர்.

## இஸ்ரேலின் நண்பன் கனடா - ஸ்டீபன் ஹார்ப்பர்



கனடிய பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் அடுத்தாண்டு இஸ்ரேலுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மத்திய கிழக்கு நாட்டிற்கு அதிகாரப்பூர்வமாக விஜயம் செய்வது இதுவே முதன் முறையாகும்.

மேலும் ஜோர்டான், பலஸ்தீனம் ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது. சமூகத் தலைவர்கள் மற்றும் இஸ்ரேல் ஆதரவாளர்கள் ஆகியோரை கௌரவிக்கும் பொருட்டு இடம்பெற்ற விருந்து நிகழ்வின் போது இதனை அறிவித்துள்ளார்.

ரொறொன்ரோ யூவிஸ் தேசிய நிதி நிறுவனத்தினரால் நடத்தப்பட்ட இந்நிகழ்வில் 5.7 மில்லியன் டொலர்கள் திரட்டப்பட்டதாகவும், இஸ்ரேலில் ஒரு பறவை சரணாலயம் கட்டப்பட இருப்பதாகவும், இதற்கு ஹாப்பரின் பெயர் சூட்டப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அன்பளிப்பு தன்னை கௌரவப்படுத்தியுள்ளதாகவும், கனடா எப்போதும் இஸ்ரேலின் நண்பன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஐஸ்லாந்தில் முதன்முறையாக நடந்த துப்பாக்கிச்சூடு



ஐஸ்லாந்து வரலாற்றிலேயே முதன் முறையாக துப்பாக்கி சூட்டுச் சம்பவம் ஒன்று நடந்துள்ளது. உலகிலேயே மிக குறைவான அதாவது 3 22 000 மக்கள் தொகையை கொண்ட நாடான ஐஸ்லாந்து, குற்ற விகிதங்கள் மிகவும் குறைவாக கொண்ட நாடு என்ற சிறப்பை பெற்றுள்ளது.

இந்நிலையில் தற்போது முதன் முறையாக அங்கு துப்பாக்கி சூட்டு சம்பவம் நடந்துள்ளது. இதில் ஒருவர் பலியானதாக அந்நாட்டு காவல்துறை தகவல் வெளியிட்டுள்ளது. கிழக்கு ரெய்க்ஜவிக்கில் உள்ள குடியிருப்பு வளாகம் ஒன்றில் வசித்துவந்த 50 வயது மதிக்கத்தக்க மனிதன் ஒருவன் நேற்று அதிகாலை நேரத்தில் தன்னுடைய வீட்டில் பலமுறை துப்பாக்கியால் சுட்டுள்ளான்.

செய்தியறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த காவல்துறையினர் அங்கிருந்த மற்ற குடியிருப்புவாசிகளை பத்திரமாக இடம் மாற்றினர். சுட்டுக்கொண்டிருந்த அந்த நபரை பொலிஸார் தமது கட்டுக்குள் கொண்டுவர முற்பட்டவேளையில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் அந்நபர் பலியாகியுள்ளார். இச்சம்பவம் குறித்து தங்களின் வருத்தத்தை வெளியிட்ட காவல்துறை இறந்தவரது குடும்பத்திற்கும் தங்களின் இரங்கலை தெரிவித்துள்ளது.

## சிரிய ஜனாதிபதி போர்க்குற்றவாளி - நவிபிள்ளை குற்றச்சாட்டு



சிரிய ஜனாதிபதி பஸார் அல் அசாத் உட்பட்ட உயரதிகாரிகளுக்கு எதிராக போர்க்குற்றச்சாட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளுக்காக சாட்சியங்களையும் முன் வைத்துள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார். சிரியாவின் ஜனாதிபதி அஸாத் மீது ஐக்கிய நாடுகள் நேரடியாக போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளமை இதுவே முதல்தடவையாகும்.

ஐக்கிய நாடுகளின் மதிப்பீட்டின்படி சிரிய உள்நாட்டு போரில் ஒரு இலட்சம் பேர் பலியாகியுள்ளனர்

## விண்வெளி ஆராய்ச்சியில் இந்திய சீனா கூட்டிணைவு



விண்வெளி தொடர்பான ஆராய்ச்சிகளில் இந்தியாவுடன் இணைந்து செயல்படத் தயாராக இருப்பதாக சீனா தெரிவித்துள்ளது. சந்திரனில் தரையிறங்கி ஆராய்ச்சி செய்வதற்காக சீனா தயாரித்துள்ள முதல் ஆளில்லா விண்கலமான சாங் இ-3 திங்கட்கிழமை அதிகாலை 56.4 மீட்டர் உயரமுள்ள லோங் மார்ச்- 3பி ரொக்கெட்டின் மூலம் ஷிசாங் விண்வெளி ஏவுதளமையத்திலிருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

இந்தியாவின் மங்கள்யான் விண்கலம் பூமியிலிருந்து விலகி செவ்வாய் கிரகத்தை நோக்கி தனது 300 நாள் பயணத்தைத் தொடங்கியதற்கு மறுநாள் சீனாவின் இந்த விண்கலம் செலுத்தப்பட்டுள்ளது.

சாங் இ-3 விண்கலம் வெற்றிகரமாக செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, சீன விண்வெளி விஞ்ஞானிகள் விண்வெளி தொடர்பான விவகாரங்களில் மற்ற நாடுகளுடன் குறிப்பாக அண்டை நாடான இந்தியாவுடன் இணைந்து செயல்படத் தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளனர். இந்த விண்கலம், டிசம்பர் மாத மத்தியில் சந்திரனில் தரையிறங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கெனவே, அமெரிக்காவும், முன்னாள் சோவியத் யூனியனும்தான் சந்திரனில் தரையிறங்கும் விண்கலத்தை அனுப்பின. தற்போது அந்த வரிசையில் சீனாவும் இணைந்துள்ளது.

## பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சைக்கு தடைவிதித்த ஜேர்மன்




ஜேர்மன் நாட்டில் சிறுவர்கள் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை செய்யக்கூடாது என்று அந்நாட்டு அரசாங்கம் தடைவிதித்துள்ளது. ஜேர்மனில் 20 வயதிற்குட்பட்ட 10 சதவீதம் பேர் அழகிற்கும், நாகரீகத்திற்கும் முக்கியதுவம் கொடுக்கும் நோக்கத்தில் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சையை நாடுகின்றனர்.

இந்நிலையில் அந்நாட்டில் 10,000 பேரிடம் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை குறித்து கருத்தாய்வு நடத்தப்பட்டது. அதில் 9 வயது முதல் 14 வயதுள்ள சிறுவர், சிறுமியர் தம்மை மென்மேலும் அழகூட்டுவதற்காக "லிபோசக்ஷன்" முகசீரமைப்பு, மூக்கின் நுனியழகு போன்றவற்றை அழகுபடுத்துவதற்காக மாற்று சீரமைப்பு போன்ற சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரியவந்துள்ளது.

இதுகுறித்து கிறிஸ்துவ ஜனநாயக சுகாதார தலைவர் ஜென்ஸ் ஸ்பேன் கூறுகையில், இச்சிகிச்சை சிறுவர்களின் உடலையும், மனதையும் பாதிக்கும் ஒன்றாகும்.

மேலும் மருத்துவர்களால் இது அவசியம் என பரிந்துரைக்கப்பட்டால் மட்டுமே இப்பிளாஸ்டிக் அறுவை சிகிச்சையை செய்ய அனுமதிக்கப்படும் கடும் நிபந்தனை விதித்துள்ளார்.





பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்
சகல விதமான தையல் இயந்திரங்களும் தங்கள் இருப்பிடத்திற்கே வந்து திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு :- 077 6906182

# விந்தை உலகம்

## கண்களை மிரட்டும் அழகிய பெண்ணின் சாதனை



ஒரு மனிதனுள் எத்தனை விதமான அபரித திறமைகள் குவித்து கிடக்கின்றன. அந்த வகையில் இலண்டனைச் சேர்ந்த 19 வயதான LEILANI FRANCO என்ற பெண் தன் உடலைக்கொண்டு என்னவெல்லாம் செய்கிறார் பாருங்கள். நிலத்தில் நெஞ்சை பலமாக வைத்து தன் உடலை திருப்பி எடுக்கும் சாதனையானது பலரின் புருவங்களை உயரச் செய்கிறது.


இவர் 17.47 செக்கன்களில் 20 மீற்றர் தூரத்தினை உருண்டு சென்று சாதனை படைக்கிறார். சாதாரண மனிதர்கள் நடந்து செல்வதற்கு அப்பால், இந்தப்பெண் உருண்டு சென்று அனைவரையும் மிரட்டுகிறார். கால்களால் தேனீர் தயாரிக்கிறார். தலைகீழாக மாறி புத்தகம் படிக்கிறார். இப்படி பல சாசகங்களை புரிகிறார். இவரின் சாகசங்கள் நிறைந்த சாதனைகள் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.

## வீட்டிற்குள் வினோதம்! விபரீதத்துடன் வாழும் சிறுவன்

சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் கவரக் கூடிய ஒன்று தான் ரோலர் கோஸ்டர். தீம் பார்க்குகளில் இதில் பயணம் செய்வதற்கென்றே கூட்டம் அலைமோதும். இந்த விளையாட்டு மிகவும் பிடித்து போகவே, கனடாவை சேர்ந்த நிக்கோத்ரியா என்ற இளைஞர், வீட்டிலுள்ள தனது படுக்கையறையில் மினி ரோலர் கோஸ்டரை அமைத்துள்ளார். ஆனால் இதில் பந்து மட்டுமே உருண்டோடி செல்ல முடியும். தனது பிறந்த நாள் மற்றும் கிறிஸ்துமஸ் பண்டிகையின் போது வந்த பரிசுகளை கொண்டு இதனை வடிவமைத்ததாக கூறுகிறார். எனினும் இதனை உருவாக்க ரூ.2 இலட்சம் வரை செலவு செய்துள்ளாராம்.



## மெக்சிக்கோவில் மாற்றுக்கைகள் சத்திர சிகிச்சையில் வெற்றி



அதிக வலுவுடன் கூடிய மின்சாரம் தாக்கியதன் காரணமாக தன் இரு கரங்களையும் இழந்த நபருக்கு மேற்கொள்ளப்பட்ட மாற்றுக்கைகள் அறுவைச்சிகிச்சை வெற்றியளித்துள்ளது. 53 வயதான மெக்சிக்கோ நாட்டவரான **Gabriel Granados** என்பவருக்கு மேற்கொள்ளப்பட்ட சிகிச்சையே வெற்றியளித்துள்ளது.

17 மணித்தியாலங்களாக மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையின் பலனாக இந்த மருத்துவசாதனை நிலைநாட்டப்பட்டுள்ளது. முழங்கைகளின் கீழ் உள்ள தன்னுடைய இரு கைகளின் செயற்பாட்டினை முழுமையாக இழந்த நபருக்கு, வைத்தியர்கள் இயற்கையான முறையில் இரு வேறு மனிதக்கைகளை பொருத்தி சாதனை படைத்துள்ளனர். Gabriel Granados தற்சமயம் 70 வீதம் பூரணமாக குணமடைந்துள்ள போதிலும் அவரிற்கு தசைநார்கள் சிறந்த முறையில் செயற்பட தொடர்ச்சியாக பயிற்சி அளிக்கப்படுகின்றது. இலத்தின் அமெரிக்க நாடுகளிலேயே இவரிற்கே முதன் முறையாக இரு கைகள் மாற்றுச்சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என்பது விசேட அம்சமாகும்.


**தினப்புயல் வாசக,வர்த்தக பெருமக்களே...**

**பண்டிகை தினங்களை முன்னிட்டு விசேட விலைக்கழிவுடன் வர்த்தக விளம்பரங்களை பிரசுரித்துக்கொள்ள இன்றே முந்திக்கொள்ளுங்கள்**

தினப்புயல்
6ம் ஒழுங்கை,கண்டி வீதி
தேக்கவத்தை, வவுனியா.

தொ.பே:024-2227558,
071-1850885



**வீடு விற்பனைக்கு**

நாவலர் வீதி, நெடுங்கேணியில்
1/2ஏக்கர் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு :0770624365


## 2013ஆம் ஆண்டிக்கான வவு/ சைவப்பிரகாசா ஆரம்ப பாடசாலையின் புலமைப்பரிசில் பரிசளிப்பு நிகழ்வின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்


















இப்பத்திரிகை இலக்கம் 165A, குருமன்காட்டில் அமைந்துள்ள G.H அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 08.12.2013 அன்று வெளியிடப்பட்டது.